24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2014

# ஐ.நா மனித உரிமைகள் விசாரணை - நிபுணர் குழு

ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை யூன் 25, 2014 இல் இலங்கையில் நடைபெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் பற்றிய சர்வதேச விசாரணைக்கு உதவ மூன்று நிபுணர்களை கொண்ட 12 பேர் உள்ள ஒரு விசாரணைக்குழுவை அமைத்துள்ளார். பின்லாந்து நாட்டின் முன்னாள் அரசுத் தலைவரான Mr. Martti Ahtisaari, நியூசிலாந்தின் முன்னாள் ஆளுனரும் (Governor General) உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் பணியாற்றிய Ms. Silvia Cartwright மற்றும் பாகிஸ்தான் நாட்டின் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் குழாமின் முன்னாள் தலைவரான Ms. Asma Jahangir ஆகியோரே அந்த மூன்று நிபுணர்களாவர்.


Mr Ahtisaari

Mr. Ahtisaari அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். இவர் ஐ.நா தூதுவர் (Diplomat) மற்றும் நடுவராக (Mediator) பல சர்வதேச அமைதிக்கான வேலைத்திட்டங்களில் பங்கு பற்றி மிகவும் பாராட்டப்பட்டவர். Ms. Cartwright கம்போடியாவின் விசேட நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர். ஐ.நா சபையின் குழுக்களுள் ஒன்றான பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்குதலில் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். நியூசிலாந்தின் 18ஆவது ஆளுனநராக பதவி வகித்து இவர் நவம்பர் 07, 1943 இல் Otago, நியூசிலாந்தின் பிறந்தவர். இவரே நியூசிலாந்தின் முதலாவது தலைமை மாவட்ட நீதிபதியாக நியமிக்கிப்பட்ட பெண் (1989). அத்துடன் முதலாவது உயர்நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட பெண் நீதிபதியும் ஆவர் (1993).

இவர் Otago பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை மேற்கொண்டு LL.B பட்டம்


Ms Jahangir

பெற்றவர் (1967). Ms. Cartwright கம்போடியா தீர்ப்பாயத்திற்கு நியமிக்கப்பட்ட இரண்டு சர்வதேசநீதிபதிகளில் ஒருவர். இத்தீர்ப்பாயம் கம்போடியாவில் நடைபெற்ற போர்க்குற்ற விசாரணைகளை நடத்தியது.

பின்லாந்தின் 10ஆவது அரசதலைவரான Mr. Ahtisaari யூன் 23, 1937 இல் Viipori, பின்லாந்தின் பிறந்தவர். இவர் ஐ.நா சபையின் சிறப்பு பிரதிநிதியாக Kosovo இல் இருந்தவர். Kosovo நாடு 2008 இல் Serbia விடம் இருந்து சுதந்தரம் பெற்று பிரிந்து சென்றபோது ஏற்பட்ட பல பிரச்சினைகளை தீர்த்து வைத்தவர். இவர் Namibia Indonesia போன்ற பல நாடுகளில் பிரச்சினைகள் தீர்த்து வைக்க காரணகர்த்தாவாக இருந்தவர்.

Ms. Jahangir பாகிஸ்தான் நாட்டின் பிரபல்யமான சட்டத்தரணி களில் ஒருவர். அரசியல் செல்வாக்கு மிக்க செல்வந்தக் குடும்பத்தில் ஜனவரி 1952 இல் Lahore,


Ms. Cartwright

பாகிஸ்தானில் பிறந்தவர். Kinnaird பல்கலைக்கழகத்தில் LL.B பட்டம் பெற்றவர்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி

Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# ஐ.நா மனித...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இவருக்கு St. Gallen சுவிற்சலாந்து பல்கலைக்கழகம், Queens பல்கலைக் கழகம் கனடா, மற்றும் Cornell பல்கலைக்கழகம் சிறப்பு கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவித்திருக்கின்றன.

இவர் தனது தொழில் வாழ்க்கையில் பெண் உரிமை, மற்றும் மனித உரிமை மற்றும் மத உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்தும் வாதாடியும் வந்துள்ளார். இவ்வாறான மனித உரிமைகள் விடயத்தில் பிரபல்யம் வாய்ந்த மூன்று நிபுணர்களுடன் சேர்ந்து தடய அறிவியல் நிபுணர்கள் (Forensics Experts), பாலியல் சிறப்பு நிபுணர் (Gender Specialist), சட்ட ஆய்வாளர் (Legalanalyst) மற்றும் விசாரணையாளர்கள் (Investigators) என 12 பேர் இந்த விசாரணை குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விசாரணைக் குழுவை அமைத்த பின்னர் நவநீதம்பிள்ளை அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் தான் மீண்டும் இலங்கை அரசாங்கத்தையும் மக்களையும் இந்த விசாரணைக்குழுவுடன் சேர்ந்து ஒத்துழைத்து இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களின் உண்மையை அறிய உதவுமாறு கேட்டுக்கொள்வதாக கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறான ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும் இவ் விசாரணைக்குழு தனது விசாரணைகளை நடத்தி ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றார்.

## நவநீதம்பிள்ளையின் நிபுணர்கள் குழு அரசுக்கு எதிரான இராஜதந்திர ஆளில்லா விமான தாக்குதல்



இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்குழுவிற்கு உதவ ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்துள்ள நிபுணர்கள் குழு இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ராஜதந்திர ரீதியிலான ஆளில்லா விமான தாக்குதல் என இலங்கையின் முன்னாள் இராஜதந்திரியும் சிரேஷ்ட அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அளுத்கமவில் இடம்பெற்ற முஸ்லிம் விரோத கலவரங்களும் இந்த குழுவின் விசாரணைகளுக்கு பரிந்துரைக்கும் எனக் கூறப்படுகிறது. இந்த சம்பவங்கள் இடம்பெற்ற மறுதினம் சம்பவங்களுக்கு கண்டனம் வெளியிட்டிருந்த நவநீதம்பிள்ளை, கொழும்பு அரசாங்கம் அனைத்து சிறுபான்மை மதத்தினரையும் பாதுகாக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்






CELEBRATING 25 Years
Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

போட்டி 1
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 2
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

போட்டி 3
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 4
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# முஸ்லிம்கள் மீதான வன்முறையும் சிறுபான்மை சமூகங்கள் ஒற்றுமைப்படுவதன் அவசியமும்!

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

கடந்த மாதம் இலங்கையில் இடம்பெற்ற மோசமான ஒரு விடயமாக முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்களே பதிவாகின்றது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் அதி-கரித்தே வந்துள்ளன. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் ஆங்காங்கே தொடர்ந்து இடம்பெற்றவாறே உள்ளன. அதனை விடவும், முஸ்லிம் பெண்களின் பாரம்பரிய உடை, ஹலால் உணவு குறித்த பிரச்சினை போன்ற பல்வேறு சீண்டல்களும் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்று வந்துள்ளன. கடந்த யூன் மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளினால் நான்கு உயிர்கள் பலிகொள்ளப்பட்டுள்ளன. பலர் படுகாயமுற்றுள்ளனர். பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமைகளுக்கு என்ன காரணம்? யார் காரணம்? என்பது தெளிவாகவே புலப்பட்டாலும் கூட இதன் காரண கர்த்தாக்கள் சட்டத்தின் பிடியில் அகப்படவில்லை. ஆனால், நடைபெற்ற சம்வங்களை ஆராய 20 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும், வன்முறையில் பங்கேற்றவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னணியிலுள்ளவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அவ்வாறு மேற்கொள்வதற்கான எண்ணமும் அரச தரப்பிற்கு இருப்பதாக தெரியவில்லை. எல்லாமே சர்வதேச சதி என்ற அளவில் பிரச்சினையை மூடிமறைக்கும் அல்லது, பிரச்சினையை முடித்து வைக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

இன்று இலங்கை அரசாங்கத்தில் பல முஸ்லிம் அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அரசிற்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்கள் தாங்கள் சார்ந்த சமூகத்திற்கு பதில் சொல்ல முடியாத படிக்கு மௌனமாகவே இருக்கின்றனர். அல்லது வேறு காரணங்களைக் கூறி தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்த மக்களை சமாளிக்க முயல்கிறார்கள். இப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அண்மையில் முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். அப்போது பல்வேறு விடயங்கள் முஸ்லிம் உறுப்பினர்களால் முன்வைக்கபட்டன. தாங்கள் சார்ந்திருக்கும் மக்களிடம் முகம்கொடுக்க முடியாத நிலை பற்றயும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால், அவர்கள் எல்லோரது வாய்களையும் அடைக்கும் விதமாக ஜனாதிபதி ஒரே விடயத்தை அழுத்திக் கூறினார். அது- இதற்கெல்லாம் காரணம் சர்வதேச சதி என்பது தான். ஆகவே இந்த விடயத்தை பெரிதாக தூக்கிப் பிடித்தால் அது சர்வதேச சதிகார்களுக்கே வாய்ப்பாக அமைந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான இந்த கலந்துரையாடலை அடுத்து இப்போது முஸ்லிம் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரச்சினையை சற்று அடக்கி வாசிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. அரசின் ஆதரவாளரான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஜனாதிபதி கூறியதையே திருப்பிக்கூறி முஸ்லிம் மக்களை சாந்தப்படுத்த முனைகிறார். அளுத்கம மற்றும் பேருவளை பிரதேச வன்முறைகளுக்கு சர்வதேசத்தின் சதியே காரணம் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் வாக்குகளை குறைப்பதற்காகவே இவை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறுகின்றார். விகாரை-பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தி சிங்கள – முஸ்லிம் மக்களிடையே மோதலை எற்படுத்துவது சர்வதேச நாடுகளின் சதி நடவடிக்கையே எனவும் அவர் தெரிவிக்கின்றார். இதன் மூலம் இலங்கையினுள் பயங்கரவாதம் ஏற்பட்டுள்ளதாக காண்பித்து, இந்த சம்பவத்தை ஜெனீவா மனித உரிமை சபைக்கு எடுத்துச் செல்ல சதிகாரர்கள் திட்டமிடப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.



**- விகிர்தன் -**

மற்றுமொரு முஸ்லிம் அமைச்சர் அதாவது பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் "அரசாங்கத்துடன் இணைந்து பதவிகளைப் பெற்று நாங்கள் சொகுசு வாழக்கை வாழ்வதாக யாரும் நினைக்கலாம் ஆனால், நாங்கள் மிக வெட்கத்துடனும் மனக் கஷ்டத்துடனும்தான் இந்த அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறோம் என கவலைப்படுகின்றார். இந்த அமைச்சர்களில் முக்கியமானவரும், இலங்கையின் நீதி யமைச்சருமான ரவூப் ஹக்கீம், முஸ்லிம் மக்களிடம் முகம் கொடுக்க முடியாத நிலையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். அவர் அமைச்சர் பதிவியை துறக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் எழுந்து வருகின்றபோதும் அதற்கு அவர் தயாராகவே இல்லை.

முஸ்லிம் நாடுகளுடன் இச்சம்வங்கள் குறித்து தாம் கலந்துரையாடி இருப்பதாகவும் அவர்கள் இதனைப் பார்த்துக் கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்து வருகின்றார். இந்த அமைச்சர்களில் ஒருவரான ரிசாட் பதியுதீன் சற்று காட்டமாக சில கருத்துக்களை அண்மையில் வெளியிட்டுள்ளமை யினையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற கொலைகளுக்கும், சொத்து அழிவுகளுக்கும் பொது பல சேனாவின் ஞானசார தேரர் பொறுப்பேற்க வேண்டும் என அவர் அடித்துக் கூறியுள்ளார். இந்த அரசாங்கத்தில் இருப்பதையிட்டு தான் வேதனையும் வெட்கமும் அடைவதாகவும், அளுத்கம மற்றும் பேருவளை பிரச்சினைக்கு இந்நாட்டில் தீர்வு கிடைக்காவிடின் சர்வதேசத்தை நாடப்போவதாகவும் தெரிவித்துள்ள அவர், பொது பல சேனாவின் ஞானசார தேரரை ஒரு மிகப்பெரும் பயங்கரவாதி என்று குறிப்பிட்டுள்ளார்.

பொது பல சேனாவை தடைசெய்வதற்கும், ஞானசார தேரரை கைது செய்து சிறையில் அடைப்பதற்கும் நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒன்று பட்டு கோசமெழுப்ப வேண்டும் எனவும் அவர் கோருகிறார். முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிப்பதே பொது பல சேனாவின் ஒரே இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறெல்லாம் கூறுகின்ற இந்த அமைச்சர்கள் தங்கள் பதவிகளை தூக்கியெறிய தயாராக இல்லை. குறிப்பாக நாட்டில் சட்டம் நீதி நடைமுறையில் இல்லாத போது நீதி அமைச்சர் பதவ-ியை தொடர்ந்தும் ஹக்கீம் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றார் என முஸ்லிம் மக்கள் மட்டுமல்லாது நாட்டிலுள்ள பல்வேறு தரப்பினரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இத்தருணத்தில், சிங்கள எதிர்க்கட்சிக-ளின் கருத்துக்களையும் இங்கு அவதானிக்க வேண்டும்.

கடந்த 1983ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான இனக்கலவரத்தை தான் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசிய கட்சி கட்டுப்படுத்தவில்லை என்பதை இப்போது ஒப்புக்கொள்ளும் ரணில் விக்கிரம சிங்க, அதே போன்றதொரு நிலையே முஸ்லிம்கள் மீதான கலவரத்தின் போதும் நடைபெற்றுள்ளது எனக் கூறுகின்றார். அதாவது அரசாங்கம் இதனை உடனடியாக கட்டப்படுத்தவில்லை எனவும், நடைபெற்ற துன்பியல் சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். மற்றுமொரு எதிர்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அளுத்கம தர்காநகர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் அரசாங்கமே உள்ளது என அப்பட்டமாகவே குற்றம்சாட்டியுள்ளது. இந்த நாட்டில் இனவாதத்தை உருவாக்கி இனங்களை மோத விடுகின்ற வேலையை ராஜபக்ஸவின் குடும்பம் மேற்கொண்டு வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஹலால் பிரச்சினை மற்றும் ஹிஜாப், தொப்பி போன்றவற்றை வைத்து பூச்சாண்டி காட்டிய இவர்கள் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர் என ஜே.வி.பி தெரிவிக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான மங்கள் சமரவீர. இக்கலவரங்களின் பின்னணியில் புலனாய்வுத்துறையினர் இருந்ததாக தெரிவித்து அவர்களின் பெயர்களையும் வெளியிட்டு பெரும் சர்ச்சையை கிளப்பியிருக்கின்றார். இது இப்போது பாதுகாப்புதரப்பில் ஒரு கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது.

நாட்டின் தேசிய புலனாய்வு துறையினர் தொடர்பிலான தகவல்களை வெளியிட்டு பாரிய அசௌகரியத்தையும் அனர்த்தத்தையும் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# உணர்வுகள் - உங்கள் மனதின் சாரம்



சத்குரு வாசுதேவ்

அன்பு என்கிற உணர்வின் தன்மையைப் பார்த்தால் ஒன்று புரியும். ஏதேனும் ஒன்றுடன் அல்லது யாரேனும் ஒருவருடன் ஒன்றாகக் கலந்து விட வேண்டும் என்கிற ஏக்கம்தான் அது. எல்லாவற்றையும் ஒன்றாக்க வேண்டும் என்பதுதான் யோகா. எனவே, உங்கள் உணர்வு சார்ந்த அன்பு என்பது யோகாவின் ஒருவழிப்பாதை. இந்த அன்பு நிலையை உலகின் பல சமயங்களும் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல முயன்றன. அந்த நிலைக்குத்தான் "பக்தி" என்று பெயர் கொடுத்தனர்.

பக்தி என்பது வகையறைக்குள் வராத உணர்வின் வெளிப்பாடு. தர்க்க ரீதியில் அதனை ஆராய்ந்தால், அது முட்டாள் தனமாகத்தான் தோன்றும். ஆனால் அதனை அனுபவித்துக் கொண்டிருப்பவருக்கோ அது அற்புதமானதாக இருக்கும். காதல் விவகாரங்கள் கூட அப்படித்தான். அறிவு ரீதியாக யோசித்தால் அது மூடத்தனமாக இருக்கும். ஆனால் அன்பு இல்லையென்றால் உங்கள் வாழ்க்கை அர்த்தம் இழந்து விடும்.

உணர்வுகள்.... உங்களின் அம்சங்களில் ஒன்று. அதற்குக் காரணங்களைக் கண்டறிய முடியாது. உங்கள் எண்ணங்களுக்கேற்ப அவை வடிவம் கொள்கின்றன. ஒரு மனிதரை மிகவும் "அற்புதமானவர்" என்று நீங்கள் எண்ணத் தொடங்கினால், அவரைப்பற்றி இனிமையான உணர்வுகளே உங்களுக்குத் தோன்றும். ஒருவரைப் பற்றி "மோசமானவர்" என்று நீங்கள் எண்ணத் தொடங்கினால், அவரைப் பற்றி மோசமான உணர்வுகளே உங்களுக்குத் தோன்றும். "அற்புதமானவர்" என்று நீங்கள் எண்ணுபவரைப் பற்றி மோசமான உணர்வுகளோ, "மோசமானவர்" என்று நீங்கள் எண்ணுபவரைப் பற்றி இனிமையான உணர்வுகளோ, உங்களுக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை.

உங்கள் மனதின் சாரமுள்ள பகுதிகளே உங்கள் உணர்வுகள்தான். ஏதேனும் ஒன்றுடன் ஒன்றிணைய வேண்டும் என்ற விருப்பம் அனைத்து நிலைகளிலும் நடக்கிறது. மிகவும் அடிப்படையான நிலையில் அந்த விருப்பம் ஏற்பட்டால் அது உணர்விலும், காமத்திலும் ஏற்படும் பெரும் விருப்பமாக மாறுகிறது. இந்த இரண்டிலும் நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் நீங்கள் விரும்புகிற உணர்வுடனோ, மனிதருடனோ இரண்டறக் கலக்க முடிவதில்லை. இந்த உணர்வின் வேட்கை "பேராசை" என்று சமூகத்தில் பெயர் சொல்லப்படுகிறது. அறிவாலோ, அதிகாரத்தாலோ, பணத்தாலோ ஏதோ ஒன்றை உங்களுடன் கலந்து விடச் செய்ய முயல்கிறீர்கள். மனத்தளவில் இருக்கும் இந்த ஏக்கம் உணர்வு நிலையில் வெளிப்படுகிறது. அது "பக்தி" என்றும், "காதல்" என்றும் சொல்லப்படுகிறது. பக்தன், தான் வழிபடும் ஒன்றுடன் இரண்டறக் கலக்கிறான். காதலிப்பவனும் தான் காதலிப்பதாக நினைப்பவருடன் இரண்டறக் கலக்கவே விரும்புகிறான்.

இதுவேதான் எல்லாப் படிநிலைகளிலும் ஏற்படுகிறது. நீங்கள் இப்போதிருக்கும் நிலையை இன்னும் ஓரளவு நீட்டிக்க விரும்புகிறீர்கள். உடல் அளவில் அது ஒரு விதமாக வெளிப்படுகிறது. மனதின் அளவில் இன்னொரு விதமாக வெளிப்படுகிறது. உணர்வின் அளவில் இன்னும் வேறுவிதமாக வெளிப்படுகிறது. இவை எல்லாமே வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் வழிமுறைகளே தவிர இவையே முடிந்த முடிவாக இருக்கப் போவதில்லை. இவை உங்களை ஓர் இலக்கு நோக்கி நடத்திச் செல்லப் போவதே கிடையாது. அன்பு என்பது எல்லையே இல்லாத ஏக்கம். இது உங்களை ஒன்றுபடுத்தாது. ஒரு விநாடி உங்களை ஒருவிதமாக உணர்கிறீர்கள். மறு விநாடியே நீங்கள் வேறுவிதமாக மாறுகிறீர்கள்.

உடல், மனம், உணர்வுகள் சார்ந்த வெளிப்பாடுகள் மிக இனிமையாக இருக்கும். அவையே கசப்பாகவும் மாறும். ஆனால் ஒருபோதும் அவை நிறைவை ஏற்படுத்தாது. அதனால்தான் நான் உங்கள் சக்தி நிலையைத் தூண்டுகிறேன். இங்கே மிக எளிதாக உங்களால் நிறைவு நிலையை அடைய முடியும். ஏனென்றால் இதில் இன்னொருவரின் ஒத்துழைப்பு உங்களுக்கு அவசியமில்லை. மற்ற நிலைகளில் இந்த உலகமே உங்களுடன் ஒத்துழைக்க வேண்டியுள்ளது.

இந்த உலகத்தில், உங்களுக்கு நம்பகமான ஒரே மனிதர் நீங்கள்தான். சில நேரங்களில் உங்கள் மீதே உங்களுக்கு சில சந்தேகங்கள் வரலாம். அது வேறு விடயம். ஆனால் அத்தனை சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு உங்களால் நம்பக் கூடிய ஒரே மனிதர் நீங்கள்தான். சில நேரங்களில் நீங்கள் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ளலாம். ஆனால் ஒருபோதும் உங்களை நீங்களே கைவிட மாட்டீர்கள். எனவேதான் க்ரியா யோகா, இருப்பதிலேயே மிகவும் புத்திசாலித்தனமான வழியாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. அதனை நீங்கள் பயிற்சி செய்தால் மற்றவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்குத் தேவை இல்லை.

"அன்பு என்பது மனிதர்களின் இயல்பான ஏக்கமா?" என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். எதனுடனாவது ஒன்று சேரவேண்டும் என்கிற ஏக்கம் இயல்பானது. அதனை எளிமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அது ஆசையின் வழியில் செயல்படுகிறது. உணவு, காமம், அன்பு, கடவுள், சொர்க்கம் என்று நீங்கள் எதை விரும்பினாலும் ஆசைதான். அவை அனைத்திற்கும் வேராக விளங்குகிறது. உங்கள் பசி, காமம், அன்பு, ஆன்மீகத் தேடல் என்று இவை அனைத்துமே ஆசையில் வேர் விட்டிருப்பவைதான். வேறோன்றை உங்களின் ஒரு பகுதியாக உட்படுத்திக் கொள்ளும் விதமாய் நீங்கள் விரிவடைய வேண்டும் என்கிற ஆசைதான் இவை அனைத்திக்குமே காரணம்.

எனவே, ஆசைதான் நிரந்தரமான ஏக்கம். அன்பு என்பது ஆசையின் ஒரு வெளிப்பாடு, உங்கள் உணர்வுக்கென்று சக்தி நிலையின் சில பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் பயன்படுத்தாவிட்டால் உங்கள் மேல் அது ஒரு பாரமாய் அழுத்தும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

ப்ராரப்தம் என்று ஒன்றைச் சொல்வதுண்டு. ப்ராரப்தம் என்பது உங்களுக்கென இந்த பிறப்பில் ஒதுக்கப்பட்டுள்ள கர்ம வினையின் அளவு. இதில் ஒவ்வொருவருக்கும் விதவிதமான அளவுகளும், சதவிகிதங்களும் வரையறுக்கப்பட்டுள்ளது. உடல் சார்ந்த செயல்கள், மனம் சார்ந்த செயல்கள், உணர்வு சார்ந்த செயல்கள் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பகுதிகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் இது வேறுபடலாம். ஆனால் எல்லாருக்குமே அவர்கள் உணர்வு நிலைக்கென்று குறிப்பிட்ட அளவு சக்தியின் ஒதுக்கீடு உண்டு.

இன்று, நவீன உலகில் ஏறக்குறைய தொண்ணூறு சதவீதம் மனிதர்கள், தங்கள் உணர்வு நிலையை முழு அளவு வெளிப்படுத்தியதேயில்லை. ஒருவேளை, இந்த உலகில் உணர்வு சார்ந்த உறவுகள் சீராக இல்லாததால் வெளிப்படுத்த முடியாமல் போயிருக்கக் கூடும். பாவஸ்பந்தனா பயிற்சி வகுப்பை மேற்கொள்பவர்கள் உணர்வு சார்ந்த சக்தி நிலையில் உச்சத்தைத் தொடுவார்கள். உங்கள் வாழ்வின் வழியில் உணர்வுகள் ஒருபோதும் தனியாய் இல்லாத அளவு அந்தப் பயிற்சி வகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. யாருக்காவும், எதற்காகவும் இல்லாமல் உங்கள் உணர்வின் உச்சத்தை உங்களால் தொட முடியும். இதையே, வரையறுக்கப்பட்ட சூழ்நிலையில் உங்கள் உடலுக்கும், மனதுக்கும் செய்ய இயலும். உங்கள் உடலின் உச்சநிலைக்கு உங்களைக் கொண்டு சென்று உடல் சார்ந்த மிக ஆழமான இன்பங்களைப் பிறர் உதவியின்றி உங்களுக்குள் உணரச் செய்ய முடியும். அமர்ந்த இடத்திலேயே அந்த நிலையை நீங்கள் அடைய முடியும். மனம் சார்ந்த நிலையிலும், உணர்வு சார்ந்த நிலையிலும் காட்டும் ஆழமான ஆனந்தத்தையும், பரவசத்தையும் இருந்த இடத்திலேயே நீங்கள் உணரச் செய்ய இயலும். ஆனால் இதற்கென்று வரையறுக்கப்பட்ட சூழல் அவசியம். தங்கள் போக்கில் விட்டால் மனிதர்கள் வழி தவறிவிடக் கூடும்.

உடலோடும், மனதோடும் ஒப்பிடும்போது, உணர்வுகளைக் கையாள்வது பலவகைகளிலும் பாதுகாப்பானது. காரணம், மனிதர்களுக்கு உடலிலோ, மனதிலோ வேண்டிய ஒழுக்க வழிகள் இல்லை. உடலிலும், மனதிலும் வேண்டிய அளவு ஒழுக்க நிலைப்பாடுகள் இருந்தால் மகிழ்ச்சியின் உச்சத்தில் வீதியில் நடந்து செல்பவர்களாக மனிதர்களை நாம் மாற்ற முடியும். அத்தகைய உலகமே நான் காண விரும்புகிறேன்!

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**வெளிக்கள விருந்தும் விளையாட்டுப் போட்டியும் - 2014**

**காலம்:** ஜுலை 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம்
**இடம் :** ***Kid's Town L'Amoreaux Park,***
***3159 Birchmount Road, (Birchmount & Mcnicoll)***
***Sarborough, ON***

இந்நிகழ்விற்கு பழைய மாணவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

***416.291.9956 / 647.894.6467 / 416.299.6645 / 416.496.7037***



# மோர்ட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

## இலவச ஆலோசனை

- மோட்கேஜ் எடுக்க
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- கடன்களை, ஒன்றுபடுத்த
- பவர் ஒப் சேல் பிரச்சினையை தடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- பாங்க்ரப்சி / புறபோசல் செய்தோருக்கு மோட்கேஜ் எடுக்க
- 2nd or 3rd மோட்கேஜ்
- மற்றும் பல

**WIN UP TO $100,000***

Everyone Who Funds A Mortgage With US Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

## மோட்கேஜ் கிளினிக்

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்–வெள்ளி (call for appointment)

**வோக்-இன் Wel Come - சனிக்கிழமை 9.00 - 5.00 வரை**



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON M2J 5B4 Lic # 10530
Toll Free: 1-877-366-3487



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

**1504 Markham Rd . Toronto ON M1B 2V9**
(Markham & HWY 401)

ஜெ(Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

## உங்கள் விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்

## எனது மிகக் குறைந்த

# விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

Detached 4BR, W/Finished Bsmnt Apart In Scarborough.




New Detached 4BR Double Garage In Markham




3BR Detached Double Garage In Oshawa




2BR &2WR Luxury Tridel Condo Unit at Brimley & Ellesmere




உங்கள் வீட்டை அல்லது பேஸ் மெண்டை வாடகைக்கு விட , மற்றும் வீடு அல்லது பேஸ் மெண்டை வாடகைக்கு பெற்றுக் கொள்ள

இதில ஒண்ட வாங்க விருப்பம் தான்.
ஆனா ....டவுன் போதாதே?? கிரெடிட் கூடாதே?
மோட்கேஜ் எப்பிடி செய்றது?
என்ற குழப்பமா ????

## அழையுங்கள்;

## Jey Rasathurai MBA, BBA (Hon)

Real Estate Sales Representative/ Mortgage Agent

**Cell: 416-624-4843**

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

Dir:416-816-9011
Brokerage:416- 391-3232

**#1 Brokerage in Toronto***

#112 - 895 Don Mills Rd, Toronto, ON M3C 1W3

*"To Every Bird, Its Own Nest is Beautiful"*

*Listing commission does not include buyer brokerage commission of 2.5%

# உலகக்கிண்ண கால்பந்து - 2014

## உலகக்கிண்ண கால்பந்து: முதல் சுற்றுடன் வெளியேறிய 16 அணிகள்



உலகக்கிண்ணத்தில் முதல் கட்டப் போட்டிகள் முடிந்து விட்ட நிலையில் அடுத்தக் கட்டத்திற்கான ஆட்டங்கள் தொடங்கின. இந்த உலகக்கிண்ண கால்பந்து போட்டிகள் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு தீனி போட்டு வருகிறது. அந்த வகையில் அடுத்தக்கட்டத்திற்கு 16 அணிகள் இடம் பெற்றுள்ளன.

நடப்பு சாம்பியன் ஸ்பெயின், முன்னாள் சாம்பியன் இத்தாலி, ரொனால்டோவின் போர்ச்சுக்கல் என எதிர்பார்க்கப்பட்ட அணிகள் பலவும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற முடியாமல் போட்டியைவிட்டே வெளியேறிவிட்டன.

## இல்லை...கிண்ணம் மாதிரி

உலகக்கிண்ணம் வெல்லும் கால்பந்து அணிக்கு தங்க முலாம் பூசப்பட்ட பிரதி கிண்ணம் தான் வழங்கப்படுகிறது. உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் மூன்று முறை கிண்ணம் வெல்லும் அணிக்கு அந்தக் கிண்ணம் நிரந்தரமாக வழங்கப்படுகிறது. அதன்படி 1970ம் ஆண்டில் மூன்றாவது முறையாகக் கிண்ணம் வென்ற பிரேசில் அணிக்கு ஜுல்ஸ் ரிமேட் கிண்ணம் வழங்கப்பட்டது.

இந்த கிண்ணம் முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்டு, 36.5 செ.மீ. உயரமும் ஐந்து கிலோ எடையும் உடையதாக இருக்கும். 2038 வரை நடைபெறும் உலகக் கிண்ணத்தில் வெற்றிபெறும் அணிகளின் பெயர்களைக் இந்த கிண்ணத்தில் பொறிக்க முடியும். ஆனால் வெற்றி பெறும் அணிக்கு தங்கமுலாம் பூசப்பட்ட மாதிரி கிண்ணம் மட்டுமே வழங்கப்படுகிறது. உண்மையான கிண்ணம் சர்வதேச கால்பந்துக் குழுமத்திடமே இருக்கும்.

## வெளியேறிய அணிகள்

| | |
|---|---|
| குரூப் A | குரோசியா, கேமரூன் |
| குரூப் B | ஸ்பெயின், அவுஸ்திரேலியா |
| குரூப் C | ஐவரி கோஸ்ட், ஜப்பான் |
| குரூப் D | இத்தாலி, இங்கிலாந்து |
| குரூப் E | ஈக்குவடார், ஹோண்டுராஸ் |
| குரூப் F | போஸ்னியா, ஈரான் |
| குரூப் G | போர்ச்சுகல், கானா |
| குரூப் H | ரஷ்யா, தென் கொரியா5 |

விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# நவநீதம்பிள்ளையின்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

பாலஸ்தீனத்தின் காசாவில் இடம்பெற்ற மோதல்களில் இடம்பெற்ற மீறல்களை கண்டறிய ஐ.நா ரிச்சர்ட் கோல்ட்ஸ்டோன் என்ற ஒரு நபரை மட்டுமே நியமித்திருந்தது. எனினும் இலங்கை மீதான விசாரணை களுக்கு மூவர் கொண்ட குழுவை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நியமித்துள்ளது. இந்த குழு மிகவும் வலுவானதும் கனத்த எடையையும் கொண்டது எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

12 உறுப்பினர்களை கொண்ட ஐ.நாவின் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குழு எதிர்வரும் செப்டம்பர் மாதம் தனது விசாரணை அறிக்கையை



கையளிக்க வேண்டும் என்பதுடன் இலங்கை அரசங்கத்தின் ஒத்துழைப்புகளை பொருட்படுத்தாமல் இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளன.

# முஸ்லிம்கள்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வணிகசூரிய கண்டித்துள்ளார். இவ்வாறு நிலைமைகள் இருக்க, இன்று இலங்கையிலுள்ள தமிழ் முஸ்லிம் சிறுபான்மை சமூகங்கள் தங்கள் பாதுகாப்பை தாங்களே தீர்மானிக்கும் நிலை ஏற்பட வேண்டும் என்பது தான் இங்கு பிர-தானமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும். வன்முறைகளுக்கு எதிராக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். அதனையும் விட, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் ஆர்ப்பாட்டங்களை தாங்கள் வாழும் நாடுகளில் மேற்கொண்டுள்ளனர். உதாரணமாக கனடாவிலும், லண்டனிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம் மக்களுக்காக



சிறுபான்மை சமூகங்களின் ஒற்றுமையிலேயே இந்த பாதுகாப்பு தங்கியுள்ளது. அரசியல்வாதிகள் இதற்கு இடம் கொடுக்காவிடினும், அரசியலுக்கு அப்பாலுள்ள பொது அமைப்புக்கள் இந்த ஒற்றுமைக்கு வழிசமைக்க வேண்டும். நடை-பெற்ற, முஸ்லிம் மக்கள் மீதான புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பது இதுவே முதந்தடவை என்று சொல்லப்படுகின்றது. இவையெல்லாம், இலங்கைவாழ் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றிணைவிற்கு ஒரு தொடக்கமாகப் புள்ளியாக அமையட்டும்.

## சுவாரஸ் 9 போட்டிகளில் விளையாட தடை

இத்தாலி வீரரை கடித்து வைத்த விவகாரத்தில் சுவாரஸ்க்கு 9 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. 9 போட்டிகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் எஞ்சி இருக்கும் உலகக்கிண்ண போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கால்பந்து உலகில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து சர்வதேச கால்பந்து சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு தீவிர விசாரணை நடத்தியது. அவர் கடித்து குதறும் வீடியோ காட்சிகளை ஒழுங்கு நடவடிக்கை குழுவினர் பல்வேறு கோணங்களில் பார்த்து ஆராய்ந்தனர்.

சுவாரஸ் மீதான குற்றச்சாட்டு ஆதாரங்களுடன் நிரூபணமானதால், அவருக்கு 9 சர்வதேச போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுவதாக சர்வதேச கால்பந்து சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் கிளாடியோ சல்செர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.
மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டிருப்பதுடன், அடுத்த 4 மாதங்களுக்கு கால்பந்து தொடர்பான எந்த நடவடிக்கைகளில் பங்கேற்கவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# ரொறொன்ரோவில் $300,000 இற்கு அதிகமாக விற்கப்பட்டுள்ள வீடு

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 418

ரொறொன்ரோவில் ஒருவர் வீட்டை வாங்குவற்கு விற்பவர் கேட்ட விலையை விட ஏறக்குறைய $300,000 அதிகமாக விலையை கொடுத்து சாதனை செய்துள்ளார். ரொறொன்ரோவில் றிவடேல் (Riverdale) பகுதியில் இரண்டு சேர்ந்த 4 அறைகளைக் கொண்ட 2000 சதுர அடி கொண்ட வீடு $990,000 இற்கு சந்தைக்கு (MLS System) கொண்டு வரப்பட்டது. இந்த வீட்டினை வாங்குவதற்கு $1.3 மில்லியன் கொடுத்துள்ளார். இந்த நிலைப்பாடு, அதாவது சந்தைக்கு கொண்டுவரப்பட்ட விலையை விட அதிகமாகக் கொடுத்து வாங்குவது இன்றைய காலகட்டத்தில் சாதாரணமாகக் காணப்படுகின்றது. இந்நிலைமை முக்கியமாகவும், குறிப்பாக ரொறொன்ரோ, வன்கூவர் பகுதிகளிலே அதிகமாகக் காணப்படுகின்றது.

இதற்கு சாதகமாக அண்மையில் ரொறொன்ரோவில் வடகிழக்கு பகுதியில் இரண்டு சேர்ந்த வீடு $499,000 இற்கு சந்தையில் இடப்பட்டது. 6 ஆதனப்பிரதிநிதிகள் அவ்வீட்டிற்கான தமது விலையினைக் கொடுத்திருந்தனர். ஆகக்கூடிய விலையாக வாங்கியவர் $665,000 ஐக் கொடுத்துள்ளார். இவையே இன்றைய நிலைமை. ரொறொன்ரோவின் எல்லா பகுதிகளிலும் இந்நிலைமையை காணலாம்.

றோயல் வங்கி, இவ்வாறான விலை அதிகரிப்பு பாரிய விளைவை ஏற்படுத்தலாம் என அபாயச் சத்தம் போட்டுள்ளது. இதற்கு அவர்கள் முன்வைத்திருந்த காரணங்கள் முறையே அடமானக்கடனின் நீண்ட காலத்தில் ஏற்பட இருக்கும் அதிகரிப்பு,



வட்டிவீத (Rising longterm interest rate), வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு (Unemployment increase), அடுக்குமாடி மனைகளின் விலையில் இறக்கம், மற்றும் சீனாவின் வங்கிகளில் ஏற்படும் நெருக்கடியான நிலைமை போன்றவையே.

முக்கியமாகக் கூறக்கூடிய மற்றைய காரணம் சாதாரண மக்களின் ஆதனம் சம்பந்தமான மாதாந்தக் கொடுப்பனவு (Affordability). ஆனால் இன்றைய நிலையில் மிகக் குறைந்த வட்டிவீதத்தால் பெரிதான பாதிப்புகள் ஏற்படவில்லை. 4 இல் 10 கனடியர்கள் நகரத்திலேயே வாழ்கின்றனர். சிலர் நகரின் மத்தியில் வீட்டை வாங்கிய போதிலும் பலரால் நகரின் மத்தியில் வீடு வாங்குவது இயல்பாக இல்லை.

ரொறொன்ரோவில் வீடு வாங்குபவர்கள் தமது வருமானத்தின் 56% ஐ ஆதனத்திற்காக செலுத்த வேண்டியுள்ளது. வன்கூவரில் 82% ஆகவும் ஒன்ராரியோ முழுவதிலும் சராசரி 51% ஆகவும் காணப்படுகின்றது. இது கடந்த 24 வருடங்களில் அதிகூடியதாகக் காணப்படுகின்றது. பொதுவாக CMHC, இந்த பெறுமதியை 30 ஆகக் கொண்டே கணக்கிடப்படுகிறது. அதிக அடுக்குமாடிக்கட்டிடங்களின் நிர்மாணம் மாதாந்த கட்டுப்பணத்தில் ஓரளவு இறக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கட்டப்படும் அடுக்குமாடிக் கட்டிடத்தின் அலகுகளில் 1/4 பகுதிக்கு மேற்பட்டவை வாடகைக்கு விடுவதற்காகவே வாங்கப்படுகின்றது. அதாவது முதலீட்டாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

(தனி வீடுகள், இரு சேர்ந்த வீடுகள் மற்றும் தொடர் வீடுகளின் விலை அதிகரிப்பு முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களிற்கு மிக நெருக்கடியான நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்நிலையினை தவிர்ப்பதற்கு அடுக்குமாடி மனைகளே ஒரே வழியாகக் காணப்படுகின்றது. அதிகவிலை கொடுத்து வீடு வாங்க முடியாதவர்களுக்கு அடுக்குமாடி மனைகளே ஒரே வழியாகக் காணப்படுகின்றது. அரசுகளின் புதுப்புது கொள்கை வகுப்புக்களால் எதிர்வரும் காலங்களில் அடுக்குமாடி மனைகளிலும் பல இறுக்கங்கள் கொண்டு வரலாம்.

மேலும் ஒரு காலத்தில், அதிகமான வாடகை அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருந்தன. இவை புதிதாக நாட்டிற்கு வருபவர்களிற்கு, வருமானம் குறைந்தவர்களிற்கு வசதியாக இருந்தது. இவ்வாறான கட்டிடத்தொகுதிகள் கடந்த 30 வருடங்களாக நிர்மானிப்பது, மிகமிகக் குறைந்து விட்டது. இதனால் வருமானம் குறைந்தவர்களும் அடுக்குமாடி கொண்டோ மனைகளை வாடகைக்கு எடுக்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. இதனால் 41% ஆன வாடகையாளர்கள் தமது வருமானத்தின் 30% இற்கு மேற்பட்ட தொகையை வாடகைக்காக செலுத்த வேண்டியுள்ளது.

இதனால் தனிவீடு, இரு சேர்ந்தவீடுகள், தொடர் வீடுகள் வாங்க விரும்புபவர்கள் ரொறொன்ரோ, வன்கூவர் நகரிற்கு வெளியேதான் வாங்க வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்படுகின்றது. ரொறொன்ரோ போன்ற நகருடன் ஒப்பிடும் போது வெளியே வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது. வேலைவாய்ப்புகள் குறைவு. போக்குவரத்து வசதிகள் குறைவு. இதனால் வசதியானவர்கள் நகரின் முக்கிய ப கு தி க ளி ல் வா ழ க் கூ டி ய

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran,* P.Eng.
*Broker / Owner*

**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

**HOTEL FOR SALE**

* 78 Renovated rooms
* Brand Name
* Location: GTA
* Revenue: Over $1.5 Million
• Asking $6.5Million

**GAS STATION FOR SALE**

* Brand new gas station.
* 1 Hour & 15 min. from Scarborough on HWY 12
* Brand name
* 6 Pumps
* TimHorton (rental income)

**Asking $3.45 Million**

**COMMERCIAL UNITS FOR SALE**

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

**NEILSON & MCLEVIN CONDO. FOR SALE**

2 Bedroom condo. for sale. 2 Washrooms. Laminate floors. Close to major Highways, Grocery stores, mall...

Asking only $189,900



**HOTEL FOR SALE**

* 98 Romms
* Brand New Hotel
* 2 ½ hrs. From Toronto
* Revenue over $1.1 Million

**HOTEL FOR SALE**

* Brand Name Hotel
* 1 ½ hour from Mississauga
* 60 Rooms
* Resonable Rate
* Income over $1Million Income

**Asking price**
**$1.5 Million**

**SPACE AVAIL. FOR DENTAL OFFICE**

1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - Middlefield & Finch. Dedicated underground parking & locker included.

**Pl. call: 416.315.9397**

# உலக கோப்பை ஹாட்ரிக் கோல் 2014

## விளையாட்டுத் தகவல்கள் 351

உலக கோப்பையில், ஒரு போட்டியில் ஒரு வீரர் மூன்று அல்லது அதற்கு மேல் கோல் அடித்தால் அது "ஹாட்ரிக்" கோலாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். கடந்த 19 உலக கோப்பை தொடர்களில், இதுவரை 48 முறை இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

* முதன்முறையாக 1930ல் உருகுவேயில் நடந்த உலக கோப்பை தொடரில், அமெரிக்காவின் பெர்ட் படேனாட், பராகுவே அணிக்கு எதிராக முதன்முறையாக "ஹாட்ரிக்" கோல் அடித்தார்.

* கடைசியாக தென் ஆபிரிக்காவில் 2010ல் நடந்த தொடரில் ஆர்ஜென்டினாவின் கான்ஜலோ ஹிகுயன், தென் கொரியாவுக்கு எதிராக "ஹாட்ரிக்" சாதனை படைத்தார்.

* கடந்த 2006ல் நடந்த உலக கோப்பை தொடரில் ஒரு முறை கூட "ஹாட்ரிக்" கோல் அடிக்கப்படவில்லை.

* கடந்த 1954ல் சுவிட்சர்லாந்தில் நடந்த உலக கோப்பையில் அதிகபட்சமாக 8 முறை "ஹாட்ரிக்" சாதனை படைக்கப்பட்டது.

* ஜெர்மனி சார்பில் அதிகபட்சமாக 6 முறை "ஹாட்ரிக்" கோல் அடிக்கப்பட்டது. ஆர்ஜென்டினா, ஹங்கேரி அணிகள் தலா 4 முறை இச்சாதனையை படைத்தன.

* ஹங்கேரியின் சாண்டர் பீட்டர் கோசிஸ் (1954), பிரான்சின் ஜஸ்ட் பான்டைன் (1958), ஜெர்மனியின் ஜெர்டு முல்லர் (1970), ஆர்ஜென்டினாவின் காப்ரியல் பாடிஸ்டுடா (1994, 98) ஆகியோர் இதுவரை தலா 2 முறை "ஹாட்ரிக்" கோல் அடித்துள்ளனர்.

* இளம் வயதில் "ஹாட்ரிக்" கோல் அடித்த வீரர் என்ற பெருமையை பிரேசிலின் பீலே (17 வயது, 244 நாட்கள்) பெற்றார்.

* 1966ல் மேற்கு ஜெர்மனிக்கு எதிராக "ஹாட்ரிக்" கோல் அடித்த இங்கிலாந்தின் ஜெப் ஹர்ஸ்ட், உலக கோப்பை தொடரின் பைனலில் "ஹாட்ரிக்" கோலடித்த ஒரே வீரரானார். முதன் முதலாய்...

இதுவரை நடந்துள்ள 19 உலக கோப்பை கால்பந்து தொடர்களில், முதன்முதலாக நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் பற்றி காணலாம்.

* முதல் உலக கோப்பை தொடர் உருகுவேயில் (1930) நடந்தது.

* உலக கோப்பை தொடரின் முதல் போட்டியில், பிரான்ஸ்-மெக்சிகோ அணிகள் மோதின.

* முதல் உலக கோப்பை வென்ற அணி என்ற பெருமையை உருகுவே அணி தட்டிச் சென்றது. ஆர்ஜென்டினாவுக்கு எதிரான பைனலில், இந்த அணி 4-2 என வென்றது. தவிர,



உலக கோப்பை வென்ற முதல் கப்டன், முதல் பயிற்சியாளர் என்ற பெருமையை முறையே உருகுவேயின் ஜோஸ் நாசாஜி, ஆல்பெர்டோ சுபிசிசி பெற்றனர்.

* முதல் உலக கோப்பை பைனலின், முதல் கோல் அடித்தவர் என்ற பெருமையை உருகுவேயின் பாபிலோ டொரடோ பெற்றார்.

* முதல் உலக கோப்பை வென்ற உருகுவே அணி, அடுத்து இத்தாலியில் நடந்த (1934) தொடரில் பங்கேற்க மறுத்தது. கோப்பை வென்ற ஒரு அணி இப்படி செய்தது இதுவே முதல் மற்றும் கடைசி முறை.

* 1934ல் கோப்பை வென்ற இத்தாலி, 1938ல் தொடரை நடத்திய பிரான்ஸ் அணிகளுக்கு முதன்முறையாக உலக கோப்பை தொடரில் பங்கேற்க நேரடி அனுமதி கொடுக்கப்பட்டது.

* தொடர்ந்து இரண்டு முறை (1934, 38) கோப்பை வென்ற அணி என்ற பெருமையை முதலில் இத்தாலி பெற்றது.

* சுவிட்சர்லாந்தில் நடந்த (1954) உலக கோப்பை தொடர் தான் முதன் முதலில் "ரிவி"யில் ஒளபரப்பப்பட்டது.

* ஒரே தொடரில் (1954) 11 கோல்கள் அடித்தவர் என்ற பெருமையை ஹங்கேரியின் சண்டர் காக்சிஸ் தட்டிச் சென்றார்.

* இங்கிலாந்து-பிரேசில் அணிகள் மோதிய (1954) போட்டியில் தான் முதல் முதலாக கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

* மெக்சிகோவின் அன்ரோனியா கர்பஜால் முதல் முறையாக ஐந்து உலக கோப்பை தொடரில் (1930 - 1966) பங்கேற்றவர் என்ற சாதனை படைத்தார்.

* உலக கோப்பை பைனல் (1966) ஒன்றில் "ஹாட்ரிக்" கோல் (எதிர்-மேற்கு ஜெர்மனி) அடித்தவர் என்ற சாதனையை முதன்முதலாக இங்கிலாந்தின் ஜெப் ஹர்ஸ்ட் படைத்தார். இதுவரை இந்த சாதனை முறியடிக்கப்படவில்லை.

* மெக்சிகோ (1970) தொடரில் தான் முதன் முதலாக "சப்ஸ்டியூட்" வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தவிர, நடுவர்கள் "மஞ்சள்" மற்றும் "சிகப்பு" நிற அட்டை (ரெட்



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்




| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |



Kingston Road, Westhill Drive




3 Bedrooms, 3 W Rooms
Excellent Opportunity To Own Gorgeous & Upgraded Executive Freehold Thouse

Mccowan/Denison




4+2 Bedrooms, 4 W Rooms
Excellent Opportunity To Own Absolutely Gorgeous

Kennedy/S.Major Mac




3 Bedrooms, 3 W Rooms
Excellent Opportunity To Own Absolutely Gorgeous

Mcowan And Lawrence




3 Bedrooms, 1 W Rooms
First Time Offered For Sale In The Last 55 Years. 3 Bedroom Sidesplit

Brimley/Lawrence




3+1 Bedrooms, 2 W Rooms
Well Maintained & Updated Freehold Executive 3+1 Townhouse

16th Ave & 9th Line




2+1 Bedrooms, 3 W Rooms
Located In The Popular Cornell Community Facing School & Park

Markham/ N Of Sheppard




3+1 Bedrooms, 4 W Rooms
1997 Built With Brick Exterior & Fully Finished Basement W/ 3Pc Washroom

Ironwood/Millard




3+1 Bedrooms, 4 W Rooms
Location In The Heart Of Stouffville.

Morningside/Oasis




4+1 Bedrooms, 4 W Rooms
Beautiful Detached 2 Story Brick Home Built By Mattamy

9th Line/14th Ave




3+1 Bedrooms, 4 W Rooms
Beautiful, Luxurious 3+1 Br House In The High Demand Box Grove Area

Middlefield/Denison




4+2 Bedrooms, 4 W Rooms
Fin Bsmnt Apartment Rented For 950/Per Month W/ 2Bdrms & Sep. Side Entrance

E Of Tenth Line & N Of Hoover




4 Bedrooms, 4 W Rooms
Over 2600 Sq.Ft Of Fieldgates Finest. 9 Foot Ceilings, Hardwood

Boxgrove Bypass & 14th Ave




4 Bedrooms, 3 W Rooms
2Beautiful & Extremely Bright 4 Bedroom Corner Unit On Extra Large Lot

Markham / 16th Ave




4+2 Bedrooms, 5 W Rooms
Custom Hardwood Flooring Through-Out. Concrete Patio In Backyard, Front Interlock

Taunton & Salem




9 Bedrooms, 12 W Rooms
Palatial 10 Bdr Estate On 1.83 Acres In Prestigious Cachet Estates Area

Sell your home
# FASTER
and more
# MONEY

RE/MAX #1

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

**Direct 416 - 276-1225**

**Your home sold in 30 days or we buy it**



KZG 647-200-5833

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

Email: esrinathan@yahoo.com

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

## Get More $$$ For Your House By Calling Me!

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

# காலத்தோடு வளரும் கணினிகள் - 48

அன்பான வாசகர்களே!

AutoCAD Civil 3D எனப்படும் குடிசார் பொறியியல் வடிவமைப்பு மென்பொருள் (Civil Engineering Design Software) குடிசார் பொறியியல் வடிவமைப்பிலும், இத்துறையின் ஆவணப்படுத்தலிலும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மென்பொருளும் AutoDesk நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. AutoDesk நிறுவனத்தால் உருவாக்கப்படும் Infrastructure Design Suite, Infraworks 360, Roadway Design for Infraworks 360, Bridge Design for Infraworks 360, Structural Bridge Design, Vehicle Tracking, Vault (Project Collabration Software), AutoCAD Map 3D, Revit (Building Design & Construction Software), Civill Infrastructure Land Development போன்ற பல மென்பொருட்களும் குடிசார் பொறியியல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. Bentley நிறுவனத்தால் உருவாக்கப்படும் Power GEOPAK, Power InRoads, Bentley Power Civil, Bentley MX Road போன்ற மென்பொருட்களும் குடிசார் பொறியியல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரவியல், மின்னியல் துறைகளில் SolidWorks மென்பொருள் CAD வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த மென்பொருள் Dassault Systemes Solidworks corp. என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இதேநிறுவனத்தால் CATIA என்ற மென்பொருளும் உருவாக்கப்பட்டுள்ளது. AutoDesk நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட AutoDesk Inventor என்ற மென்பொருளும் இதே பயன்பாட்டிற்கு உதவும். Siemens நிறுவனத்தால் NX, SOLID EDGE போன்ற மென்பொருட்களும் இதே பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டவை. இந்தப் பயன்பாட்டிற்கு உதவும் மென்பொருட்களாக Draft Sight, Cobalt, Vectorworks Fundamental, VariCAD, CADDIE Mechanical, Solvespace போன்ற மென்பொருட்களையும் எடுத்துக் கொள்ளலாம். FreeCAD என்பது இலவசமாகக் கிடைக்கும் ஒரு மென்பொருளாகும்.

அடுத்ததாக திட்டப்பணி மேலாண்மை (Project Management) வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் மென்பொருட்களைக் கவனிப்போம். Microsoft Project என்ற மென்பொருளை Microsoft நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது மிகவும் பிரபல்யம் வாய்ந்த மென்பொருளாக விளங்குகிறது. இந்த மென்பொருளின் முதலாவது வடிவம் 1990ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த மென்பொருளின் மூன்றாம், நான்காம் வடிவங்கள் 1992, 1993 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. இந்த மென்பொருளின் ஐந்தாவது வடிவம் 1995ஆம் ஆண்டில் MS Project 95 என்ற பெயருடன் வெளிவந்தது. இந்த மென்பொருளின் ஆறாவது வடிவம் 1998ஆம் ஆண்டில் MS Project 98 என்ற பெயருடனும், ஏழாவது வடிவம் 2000ஆம் ஆண்டில் MS Project 2000 என்ற பெயருடனும், எட்டாவது வடிவம் 2002இல் MS Project 2002 என்ற பெயருடனும், ஒன்பதாவது வடிவம் 2003இல் MS Project 2003 என்ற பெயருடனும், பத்தாவது வடிவம் MS Project 2007 என்ற பெயருடனும் வெளிவந்தன. இவ்வாறே MS Project 2008, 2009, 2010, 2011, 2012, 2013, 2014 வடிவங்களும் அடுத்தடுத்து வந்துள்ளன. திட்டப்பணி மேலாண்மை மென்பொருட்களாக பல மென்பொருட்கள் Microsoft Project மென்பொருட்களுக்கு முன்பும் பின்பும் வெளிவந்தவாறு உள்ளன. Harvard Total Project Manager,




விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளிவந்துள்ளது என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள். இந்த இந்த நூலினை வாங்கி வாசித்தவர்கள் பகிர்ந்து கொள்ளும் விமர்சனங்கள் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. உங்கள் கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள். இந்த நூலின் பிரதியை வாங்கிக்கொள்ள விரும்புபவர்கள் விளம்பரத்தின் பணிமனையில் வாங்கிக்கொள்ளலாம்.




Primavera, Gantt Project, Easy Project Management, Project Insight, Sciforma எனப்பல திட்டப்பணி மேலாண்மை மென்பொருட்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றை விட இணையத்தளங்களில் இயங்கும் மென்பொருட்களாகவும் சில திட்டப்பணி மேலாண்மை மென்பொருட்கள் உள்ளன. பல்வேறு துறைகளில் உள்ளவர்கள் இத்தகைய திட்டப்பணி மேலாண்மை மென்பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றார்கள். கட்டிடங்களில் பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பிகளை (Reinforcement Bars) உரிய வடிவங்களில் வளைப்பதையும், உரிய அளவுகளில் வெட்டுவதையும் Rebar Fabrication தொழிற்சாலைகள் செய்கின்றன. இந்தப் பணியை Numerical Control Machines செய்கின்றன. இதற்கு வேண்டிய வடிவமைப்புக்களைச் செய்வதற்கு RebarCAD, ASA Rebar CAD போன்ற மென்பொருட்கள் உதவுகின்றன. இவற்றை Rebard Detailing மென்பொருட்கள் என அழைப்பார்கள். கட்டிடங்களில் உள்ள Steel Structures இனது வடிவமைப்புக்களைச் செய்வதற்கு XSteel, Soft Steel போன்ற மென்பொருட்கள் உள்ளன. எல்லாவிதமான பொறியியல் துறை சார்ந்த வேலைகளிலும் Estimation செய்வதற்கு பல மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் பயன்பாடும் முக்கிய பங்கை வகிக்கின்றன. பொறியியல் துறையில் பணிபுரிபவர்கள் இத்தகைய மென்பொருட்களைப் பயன்படுத்துவதற்கான செயன்முறை அறிவைப் பெற்றிருத்தல் அவசியம் ஆகின்றது. இன்றைய இதழில் குறிக்கப்பட்ட மென்பொருட்கள் எல்லாம் குறிக்கப்பட்ட துறைசார்ந்து இருந்தாலும் வாசகர்களாகிய உங்களிற்கு பொது அறிவாக அமையட்டும் என்ற எண்ணத்துடன் சுருக்கமாக எழுதியுள்ளேன். இந்தக் குறிப்புக்கள் சில வாசகர்களுக்காவது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நினைக்கின்றேன்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வீட்டுப்பொறுப்பு காப்புறுதித் திட்டம்

## கனடிய தகவல் தொடர் 221

### *Home Liability Insurance*

'வீடு' என்ற ஒரு சொத்தின் உரிமையாளர் அதில் இருக்கும்வரை எத்தனையோ விதமான பொறுப்புகள், சிக்கல்கள் சில நேரங்களில் எதிர்பாரமலே நடக்கலாம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள், அப் பாதிப்பில் இருந்து மீள முடியாமல் தவிர்த்தவர்கள் ஏராளம். கனடாவில் வீடுகள், சொத்துகள் வைத்திருப்பவர்களின் நிலைப்பாடு இதுவாகும். இத்தகைய பாதிப்புக்கு உள்ளான வீட்டு உரிமையாளர் களை பாதுகாப்பதற்கென உள்ளதே காப்புறுதி கம்பனிகள் வழங்கும், 'வீட்டுப் பொறுப்பு காப்புறுதித் திட்டம்' (Home Liability Insurance).

உதாரணமாக எதிர்பாராத விதமாக ஏற்படும் என எதிர்பார்க்கும் ஆபத்துக்களையும், விபத்துக்களையும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. ஒரு வீட்டின் முன்னிருக்கும் நடைபாதையில் உள்ள பனியை வீட்டு உரிமையாளர் துப்பரவாக்கத் தவறியதால் அதில் ஒரு அந்நியர் விழுந்து அவருக்கு பாதிப்பு நடந்து விட்டது என வைத்துக் கொள்வோம். அவர் ஒரு வக்கீல் மூலமாக பனியை துப்பரவு செய்யாத வீட்டு உரிமையாளருக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்கு தொடர்ந்து விட்டார். நீதிமன்றம் பாதிக்கப்பட்டவருக்கு சுமார் ஒரு மில்லியன் டொலர் வழங்க வேண்டும் என வீட்டு உரிமையாளருக்கு எதிராக தீர்ப்பும் வழங்கி விட்டது என வைத்து கொண்டால் இந்த நிலைமையில் வீட்டு உரிமையாளரை பாதுகாப்பது யார்?



'வீடு' என்ற சொத்து உட்பட வங்கியில் உள்ள பணமும், முதலீட்டு திட்டங்களில் உள்ள சகல பணமும் பாதிக்கப்பட்டவருக்கு கொடுப்பதற்காக பறிமுதல் செய்யப்படுவ தனை தடுத்து நிறுத்த முடியுமா?.

2. வீடு ஒன்றின் சமையலறையில் இருந்து பரவிய தீ ஏனைய வீடுகளையும் அழித்து விட்டது. தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒரு சொத்து இழப்பு. அதற்கு மேலாக அவர்களின் வீட்டில் இருந்து ஏனைய வீடுகளுக்கு பரவிய தீயினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும். (இது பல இடங்களில் தொடர் வீடுகளில் (Townhouse) நடைபெற்றுள்ளது.)

அப்படி ஒரு இழப்பு ஏற்பட்டால்... என கற்பனை பண்ணிப் பாருங்கள். இது ஒரு சிறுதொகையா! நாமே தீர்த்து விட்டுப் போகலாம் என சிந்தித்து முடிவு செய்வதற்கு! எந்த சந்தர்ப்பத்திலும் இது இயலாத ஒரு விடயம்!

3. கொண்டோமினியம் போன்றவற்றின் உரிமையாளர் தமது குளியல் அறையினை உபயோகிக்கும் போது தண்ணீர் குழாயில் ஏற்பட்ட பாதிப்பு அல்லது வெடிப்பு கீழ் மாடியில் உள்ள உரிமையாளரின் குடியிருப்பு பிரிவின் கூரையினை பாதித்து விட்டது. அவர் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து அந்த பாதிப்புகளுக்கு மேல் வீட்டு உரிமையாளரே பொறுப்பு என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் போது அந்த நட்டஈட்டு தொகையினை எவ்வாறு கொடுப்பது?

(மேற்குறிப்பிட்ட நீர் குழாயில் ஏற்படும் பாதிப்புகள் தொடர் வீடுகளிலும் (Town Houses) ஏற்படலாம். அப்படி பாதிப்பு ஏற்படும் போது என்ன வழி)

4. வீட்டிற்கு முன்புறம் அல்லது பின்புறம் நின்று தாங்களோ அல்லது பிள்ளைகளோ விளையாடும் போது, ஒரு பந்து அல்லது சுழல் வீச்சு விளையாட்டு உபகரணங்கள் பக்கத்து வீட்டுகாரரின் ஜன்னலை அல்லது வாகனத்தின் கண்ணாடியினை உடைத்து விட்டது. எவ்வாறு இந்த பொறுப்பினை கையாள்வது?

6. வீட்டிற்கு வருகை தந்த ஒருவர் வீட்டினுள் ஏதோ ஒன்றில் இடறுபட்டு விழுந்து ஏதாவது எலும்பு உடைந்து விட்டது என்றால், அவர் வீட்டு உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை தொடர்ந்தால் அதற்கும் வீட்டு உரிமையாளரே பொறுப்பு. நட்டஈடு வழங்கியே தீர வேண்டும். (அதற்காக வீட்டு உரிமையாளர் ஒருவர் தமது வீட்டினுள் விழுந்துவிட்டு காப்புறுதி கம்பனியிடம் இதற்காக காப்புறுதி கம்பனியிடம் நட்டஈடு கோர முடியாது)

7. வீட்டினுள் உதவி செய்ய வந்த உறவினர் ஒருவருக்கு வீட்டினுள் அல்லது வீட்டு காணியினுள் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டு, அவர் வீட்டு உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தாலும், அதற்கு நட்டஈடு வழங்கியே தீர வேண்டும். சரி! இப்படியான ஆபத்துகள் வரலாம் என பீதி கொள்ளும் வீட்டு உரிமையாளருக்கு பாதுகாப்பு வழங்க உள்ளதே பொறுப்பு காப்புறுதியும் அதனை நடைமுறைப்படுத்தும் காப்புறுதிக் கம்பனிகளும் ஆகும்.

இப்படி ஒரு பாதிப்பு ஏற்பட்டால் வீட்டு உரிமையாளரின் பிரச்சினையினை காப்புறுதி கம்பனியே தன் கையில் எடுத்து இதனை முறையாக கையாளும்.

வீட்டு உரிமையாளருடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் எதுவிதமான பொறுப்பும் உரிமையாளருக்கு இல்லையெனில் வீட்டு உரிமையாளருக்காக காப்புறுதி கம்பனியே தமது செலவில் திறமையான சட்ட நிபுணர்களை வைத்து வாதாடி உரிமையாளரை பிரச்சினையில் இருந்து விடுவித்துக்கொள்ளும்.

வீட்டுஉரிமையாளர் உண்மையாகவே ஒரு பிரச்சினைக்கு பொறுப்பு என்றால், பாதிக்கப் பட்டவருக்கு பாதிப்பின் அளவுக்கு ஏற்றமாதிரி நட்டஈடு வழங்கி பிரச்சினை யினை தீர்த்துக் கொள்ளும். வீட்டு உரிமையாளருக்கோ பெரும் நிம்மதி! எனவே வீட்டு உரிமையாளருக்கு இங்கு தேவை 'வீட்டுக்காப்புறுதி' இதில்

- தீ அபாய பாதுகாப்பு காப்புறுதி
- பொருட்கள் திருட்டு போனால் பாதுகாப்பு காப்புறுதி
- மேற்குறிப்பிட்ட பொறுப்பு காப்புறுதி
- வீடு ஏதாவது இயற்கை அழிவுக்கு உட்பட்டால் ஏற்படும் பாதிப்புக்கு காப்புறுதி

இப்படி ஏராளமான விடயங்கள் ஒன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளன. தங்கள் மாத கட்டணம் ஒரு சொற்ப பணம்! காப்புறுதி கம்பனி பொறுப்பு எடுப்பது மிகப்பெரிய பாதுகாப்பினை வீட்டு உரிமையாளருக்கு கொடுக்கிறது.

சிறிய செலவு, பெரும் நிம்மதி.
சிந்தித்து செயல்படவும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**



Dr. Lata

Based on Appointment

*Cell: 416.890.9217 Office: 647.304.6046*
*5215 Finch Ave. E. #220, Toronto, ON*

# ரொறொன்ரோவில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வசதிகளும் பணவசதி குறைந்தவர்கள் நகரிற்கு வெளியே வாழவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. இதனால் தொழிலிற்காக நகரை நோக்கி ஒவ்வொரு நாட்களும் வர வேண்டியுள்ளது. அதிகநேரம் தொழிலிற்கு போய் வருவதற்காக செலவழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சுற்றாடல் மாசு அடைவதும் அதிகமாகவே காணப்படு கின்றது. இந்நிலைமையே உலகின் அதிகமான நகரங்களில் நிலைமை ஆகும். சனத்தொகை அதிகரிப்பு, மக்கள் நகரங்களை நோக்கிய நகர்வு, நகரின் மத்தியில் வீட்டின் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாததே! வாங்குபவர்களுக்கு புதிய நெருக்கடிகளையும் உருவாக்கலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளலாம்.

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

# SUMMER MATH PROGRAM 2014

***21 years** of experience in teaching math*



## Gr. 11 & Gr. 12 only



Info: **416-666-5515**

## "FEEDBACK EXCERPTS FROM SOME OF OUR STUDENTS"

*Harnoor Gill (From George Town 130 Km)*

I would like to thank Master Sharma for guiding me in an advance math summer program (2013). I had no trouble travelling 130 km to get to class, because I felt more satisfied after attending class. The distance is nothing compared to the results I got in return. The math summer program is totally worth it. I am very excited to attend the G11 SMP in 2014

*Alishiya B : (From Richmond Hill)*

I am Alishiya.B, and I have participated in the summer math program (2013). After the program, I have achieved more than my ideal goal. Neither my parents or myself never got tired of coming to Master Sharma's great program from Richmond Hill. Without any question, I am looking forward to learning G12 Advance Functions with him this year with a lot of enthusiasm.

*Isha Nepal (From Mississauga)*

Hands down the best teacher ever! Mr. Sharma has transformed me from being the weakest student to being one of the top students in my math class. After seeking for many tutors, I had come across Mr. Sharma. His teaching abilities were so good that I travelled from Mississauga just to attend his class. By taking his classes and following his rules, I achieved a 90 % in math. I sincerely appreciate his help and recommend all students to take his class ASAP! - Isha Nepal

*Sadia Mohammed (From Scarborough)*

In the beginning of grade 12, I was amazed at my classmate *Tannia. V* sudden excel in mathematics. I asked her what her secret was, she revealed to me that she had attended a summer program that helped prepare her for Advanced Functions/Calculus. I wish I knew about this summer program beforehand. Immediately, I contacted Sharma sir and enrolled in his class. Ever since then my marks have also excelled because I have a better understanding for math. I am now a graduating grade 12 student, and I have gotten an offer from my first choice university program. (Accepted to University of Toronto for Life Science)

*Tannia Vijay (From Scarborough)*

On the behalf of my parents and myself, we would like to appreciate and thank Master Sharma for his valuable assistance throughout the summer math program 2013. I am overwhelmed with gratitude that he gave me the time of day to prepare and better prepare myself for the following year. The overall outcome after participating in the S.M.P is very positive. This program allowed me to excel in Advanced Functions without being time consuming. I was able to focus more on other subjects since I was no longer struggling with math. I surely enjoyed my time throughout the course of two months. – Sincerley Tannia

*Vithusa Vithiyalakan (From Oshawa)*

I am coming all the way from Oshawa, and I have been under Master Sharma's guidance for about 2 years and counting now. The grade 12 summer program helped me a lot. I went from a 68% in grade 11 functions to an 80% in grade 12 advanced functions! The summer program will definitely set the stage for an improvement in grades once school starts.

*Bhiranavi. S (From Scarborough, Advanced Placement Program)*

As a student in the grade 12 AP program, I was successful in not falling behind in Math because of Master's contributions. He helped me by clarifying all my doubts and providing lots of practice. Doing this gave me the confidence to finish the program with flying colours. Master's teaching style makes all the difference. Thank you Master.

*Starts on* **July 9th 2014**

# iNNSYS

Bundle Your Internet with
Home Phone for A Great Price

Truly Unlimited Internet!

Absolutey No Contract!

$1 = 1 YEAR HOME PHONE
+
All FREE Features

Limited Time Offer!

HIGH SPEED INTERNET $33.99

10 Mbps/1Mbps + Unlimited Download / Upload

416-8000-797
514-578-3797

www.innsys.ca

4500 Sheppard Ave E. Suite 111. Scarborough. ON M1S 3R6

One Time Activation Fee & 911 Fee Required. Offer Valid Until June 30,2014
For New Customers Only Where Technology Permits. Conditions Apply And Taxes Extra

# தமிழ் படிப்போம்

புலம்பெயர்ந்து நாம் வாழும் மண்ணிற் தமிழை வளர்க்கவேண்டும் என்பதிற் பரவலாகவே ஒரு புதிய ஆர்வம் தோன்றியுள்ளது போல் தெரிகிறது. இந்த ஆர்வத்தினை வளர்க்கவேண்டிய பாரிய பொறுப்புப் பெற்றோர், ஆசிரியர், தமிழார்வலர், கல்வி நிறுவனங்கள், தமிழ் அமைப்புகள், ஊடகங்கள் என்பவற்றின் கைகளிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் தம்பணியை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டால் நமது சந்ததியைத் தமிழராக வாழ வழிசமைத்த பெருமைக்குரியவர்களாக மாறுவர். அத்துடன் தமிழையும் வாழவைத்த மனநிறைவையும் பெற்றுக் கொள்வர். மேற்கூறிய இந்தப் பொறுப்பில் இருந்து நாம் தவறும்போது எதிர்காலத்தில் எமக்கென்று கோவில்களோ, தமிழ் அமைப்புக்களோ, தமிழ் விழாக்களோ, தமிழ் ஊடகங்களோ தேவைப்படாது போய் விடும் அபாயம் உண்டாகும் என்பதையும் நாம் நினைவில் நிறுத்தவேண்டும்.

இந்தச் சமூகப் பொறுப்பை நாம் எவ்வாறு நிறைவேற்றப் போகிறோம்? எல்லோரும் சொந்த இலாபங்களை மனதில் நிறுத்திச் செயற்பட்டால் ஒரு உருப்படியான செயல்களும் நடைபெற மாட்டா. எனவே எமது இளையோரைத் தமிழராக வாழவைக்க நாம் ஒவ்வொருவரும் எம்மால் முடிந்ததைச் செய்வோம். அந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே "தமிழ்படிப்போம்" என்ற நூல் அமைகிறது. இந்தநூல் மாணவர் வீட்டில் இருந்தே தமிழ் படிக்கத் தொடங்குவதற்கு வழிசமைக்கிறது. இந்த அடித்தளம் மாணவரை விருப்புடனும், பெரும்



எண்ணிக்கையிலும் தமிழ்படிக்கத் தூண்டுமானால் அது பெரிய காரியமாகவே அமையும். இன்று வெளியிற் கூட்டிச்சென்று தமிழைப்படிப்பிக்க வாய்ப்பு இல்லையே என்று கவலைப்படுவோரும், என்னால் முடிந்தும் என் பிள்ளைக்குத் தமிழைக் கற்பிக்க ஒரு வழிகாட்டி இல்லையே என்று ஆதங்கப்படுவோரும் கவலையை விட்டுத் தமது பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பிக்க இந்நூல் உதவுமென்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. அவ்வாறு இந்நூலை வழிகாட்டியாகக்கொண்டு தமிழை தமது பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க முன்வருவோர் எத்தகைய படிமுறையைப் பின்பற்றலாம் என்பதையே இக்கட்டுரை தரவருகிறது.

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கும் சிறுவர்க்கு ஏற்றவகையிலும், நம்பிக்கை தரும்வகையிலும் கற்பித்தற் சாதனங்கள் எம்மிடம் இல்லாதது பெரும் குறையாகவே கருதப்படுகிறது. இதனாற் சிறுவர் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் மொழி அறிமுகம் செய்யப்படவேண்டும். சிறு வயதிலிருந்தே வீட்டில் பாட்டாக, கதையாக, படங்களூடாகத் தமிழை அறிமுகம் செய்யும் பெற்றோர் எழுத்துகளையும் அறிமுகம் செய்கின்றனர். இவர்கள் அதை எந்த ஒழுங்கில் எளிதாக எழுத்தறிமுகத்தைத் தொடங்கலாம் என்பதை எடுத்துக்காட்டுவதாகத் 'தமிழ் படிப்போம்' என்னும் நூல் அமைந்துள்ளது. மேலும் இந்த நூலை வழிகாட்டியாகக்கொண்டு எந்த வயதினரும் தமிழ்மொழியைக் கற்கும் வகையில் எழுத்தறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அவரவர் வயதிற்கும், அவரவர் உள்வாங்கும் திறனுக்கும் ஏற்பத் தமிழைக் கற்கும் வேகம் வேறுபடலாம். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் மொழிகளிற் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் ஆர்வமுள்ள மாணவருக்கு உதவுவதாக அமையும் என்றும் நம்பப்படுகிறது. இவ்விடத்தில் கேட்டல் மூலம் பெற்றுக் கொள்ளும் அறிவும் மாணவருக்குக் கை கொடுக்கிறது என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். 140 பக்கங்களைக் கொண்ட இந்த நூலை எவ்வாறு படிப்படியாக மாணவருக்கு அறிமுகம் செய்யலாம் என்பதைத் தொடர்ந்து பார்ப்போம். தமிழ் படிப்போம் என்னும் நூலில் முதல் 100 பக்கம்வரை 49 எழுத்துகளும், அவற்றைக் கொண்டு ஆக்கப்பட்ட சொற்களுமே இடம் பெறுகின்றன. உயிர் 12, மெய் 18, அகர மேறிய மெய்களான க, ங, ச, ஞ, ட என்ற 18 உயிர்மெய் எழுத்துகளும், ஆய்த எழுத்து ஒன்றும் என்று எல்லாமாக 49 எழுத்துகள் இதில் அடங்குகின்றன. அந்த எழுத்துகளின் பட்டியல் நூலின் எட்டாம் பக்கத்திற் தரப்பட்டுள்ளது. ஒன்பதாம் பக்கத்தில் தமிழ் நெடுங்கணக்கு அட்டவணை தரப்பட்டுள்ளது. இந்த நூலைப் பின்பற்ற முன்வரும் பெற்றோரோ, ஆசிரியரோ, மாணவரோ முதலில் 49 எழுத்துகளை மட்டும் கற்கப் போகிறோம் என்ற நினைப்போடும், நம்பிக்கையோடும் பாடத்தைத் தொடங்கலாம்.

பக்கம் 10, 11 மாணவரின் கைப்பயிற்சிக்கான பகுதியாக அமைந்துள்ளது. பக்கம் 12, 13 'ட' எழுத்தை எங்கே தொடங்கி எப்படி எழுத வேண்டும் என்று காட்டுகிறது. தொடர்ந்து வரும் பகுதிகள் 'ட'வை 'ப' ஆக்குதல், 'ப' வை 'ம' ஆக்குதல் என்று கொண்டு செல்லப்படுகிறது. அத்துடன் அந்த எழுத்துகளின்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# JEN BOOK STORE

## Scarborough நகரில் ஒரு புத்தகசோலை

## *Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்

## *JK* தொடக்கம் *Gr 12* வரையிலான

அனைத்து பாடப்புத்தகங்கள் **(Text Books)** மற்றும் அனைத்து செயல்நூல்களும் **(Work Books)** மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன.

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம்
**JEN BOOK STORE.**

உங்கள் பிள்ளைகள் **Math, English, Science** ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா? கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




## *3001 Markham Road, Unit 21 Scaborough ON*

## *TEL: 416.738.8824 / 416.335.1500*

# Words of Peace

நான் இங்கு வரும் பொழுது எல்லா இடங்களையும் பார்வையிட்டுக் கொண்டு வந்தேன். இந்த அழகிய நகரத்தில் எங்கு பார்த்தாலும் வரலாற்றின் அழகு. அந்த வரலாற்றை விட்டு விடுபட முடியாது. எப்படி இருப்பினும் சற்றே ஒரு வேறு கோணத்தில் இதை நாம் பார்த்தால், வரலாறு மனதை ஈர்க்கும் ஒரு விடயமாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வழக்கத்தை காணக்கூடியதாக இருக்கிறது. யுத்தங்கள் நடைபெறுகின்றன. மக்கள் அமைதியை நாடுகிறார்கள். வளமான வாழ்க்கையை தேடுகிறார்கள். மக்கள் நசுக்கப்படுகிறார்கள். இதுவும் ஒரு வழக்கமாக இருக்கிறது. இதன் அர்த்தம் என்ன? ஐன்ஸ்டீன் ஒரு அழகான கருத்து சொன்னார். பைத்தியக்காரத்தனம் என்பது ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் செய்து கொண்டு வித்தியாசமான பலன் வரும் என எதிர்பார்ப்பது என்று. என் கருத்துப்படி, பல காலமாக இந்த உலகத்து மக்கள் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் செய்து கொண்டு வித்தியாசமான பலனை எதிர் பார்க்கிறார்கள். இதைத்தான் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அமைதி என்பது சாத்தியமா இல்லையா? உங்களுக்கு அமைதி என்பது வேண்டுமா வேண்டாமா? சனிக்கிரகத்தில் இருந்தோ வேற்றுக்கிரகத்தில் இருந்தோ யாரோ ஒருவர் வந்து, ஒரு கருவியை அழுத்தியதும் அமைதி வந்துவிடுமா? மனிதர்களாக, யுத்தங்களை உருவாக்கும் தகைமை எமக்கு இருக்குமானால், நிச்சயமாக அமைதியை உருவாக்கும் தகைமையும் எமக்கு இருக்கிறது. அப்படியானால், கேட்கப்பட வேண்டிய கேள்வி என்னவெனில், ஏன் அமைதி கடினமான ஒன்றாக இருக்கிறது? நான் பயணம் செய்யும் பொழுது பணக்காரர் கள், ஏழைகள், என்று எல்லோரையும் சந்திக்கிறேன். என் சொந்தக் கண்களால் நான் கண்டது, அறிந்தது என்னவெனில், அமைதி என்பது பணம் இருக்கிறதா இல்லையா என்பதில் தங்கி இல்லை. நான் பார்ப்பதெல்லாம் நாளாந்தம் அமைதிக்கான அந்தத்தேடலை. அந்த அமைதி கிடைக்க முடியாத ஒன்று என நாளாந்தம் மக்கள் தப்புக்கணக்கு போடுவதையும் நான் பார்க்கிறேன்.

அப்படியானால், இந்த அமைதிக்கான தேடலை பூர்த்தி செய்ய நாம் என்ன செய்யலாம்? இதற்கு என்ன தீர்வு? அது எம்முள்ளே இருந்து ஊற்றெடுக்க வேண்டிய ஒன்று. அங்குதான் அந்த அமைதிக்கான தாகமும் தேடலும் பிறக்கிறது. இன்று மக்கள் அமைதிக்கான வரைவிலக்கணத்தில் சிக்குண்டு இருக்கிறார்கள். ஒரு வீடு கட்ட வேண்டுமானால், ஒரு காகிதத்தில் அதன் படத்தை கீறி பார்ப்பது போல் தான் மக்கள் அமைதி குறித்தும் எண்ணுகிறார்கள். போர் இல்லாவிட்டால் அமைதி என்று வரையறுக்கிறார்கள். அப்படியானால், போர் இல்லை என்றால் அமைதி வந்துவிடுமா? அப்படியானால் எப்படி மீண்டும் அமைதி போய்விடுகிறது? அமைதி இது எல்லாவற்றை யும் விட மேலானது. அமைதி என்பது ஒரு தனிப்பட்ட மனிதனின் உள்ளுணர்வோடு சம்பந்தப்பட்டது. அமைதிக்கென ஒரு அடையாளம் இல்லை. ஒருவர் புன்னகைக்கி றார் அல்லது சிரிக்கிறார், அதனால் அவர் அமைதியாக இருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. அவர் மௌனமாக இருக்கிறார். அதனால் அவர் அமைதியாக இருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. அவர் பிரகாசமாக இருக்கிறார், அதனால் அமைதி யாக இருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. பளபளக்கிறார் என்றால் ஏதாவது நோயாகக்கூட இருக்கலாம் அல்லவா?

அமைதி என்பதற்கு அடையாளம் ஒன்றும் இல்லை. அமைதி என்பது ஒரு எளிமையான உணர்வு. காலையில் எழுந்ததும் ஒருவர் வரவேற்கும் உணர்வு. புரிந்துகொள்ளும் ஓர் உணர்வு. உள்ளே இருந்து தோன்றும் ஒரு உணர்வு. அந்த அமைதி என்பது முழு சுதந்திரத்தை அளிப்பது. நீங்கள் விரும்புவதைத் தேடவும், நீங்கள் விரும்பும் மதத்தை பின்பற்றவும், வளமான வாழ்வை வழங்கவும் அந்த அமைதி உங்களுக்கு சுதந்திரத்தை தருகிறது. செழிப்பான வாழ்வு அமைதியுடன் இணைந்திருக்கிறது. செழுமை என்றால் என்னவென்று எமக்கு தெரிவதில்லை. சில வருடங்களுக்கு முன் பொருளாதாரம் மிக செழிப்பாக இருந்தது. வங்கிகள் கடன் கொடுத்தன. எல்லாம் மிக வளமாக இருந்தன. பின் சொன்னார்கள் பொருளாதார சரிவு ஏற்பட்டுவிட்டது என்று. இதற்கு என் வரைவிலக்கணம் என்னவென்று தெரியுமா? பனி மூட்டம் அகன்றுவிட்டது. சூரிய வெளிச்சம் வந்துவிட்டது. திரைகள் விலகி விட்டன. நிதர்சனம் கண் முன் தெரிகிறது. இதைத்தான் பொருளாதார சரிவு என்றார்கள். எப்படி? ஏன்? பொருளாதார வீழ்ச்சி தான் நிதர்சனமா? வாழ்வு வளம் பற்றி எம் பார்வை திரிந்து போய் இருக்கிறது. உண்மையான வளம் மனிதன் வளமாக வாழ்கிறேன் என்று உணரும் போதுதான் ஏற்படுகிறது. நீங்கள் இப்பொழுது வளமாக வாழ்கிறீர்கள் என்று மற்றவர்கள் சொல்வதால் அது வரப்போவதில்லை. தானாகவே எப்பொழுது அமைதியாக, வளமாக, வாழ்கிறேன் என்று ஒருவர் உணர்வாரோ அப்பொழுது தான் அவர் வளமாக வாழ்கிறார். எம்முடைய அமைதி சார்ந்த பார்வையை மாற்றுவதென்பது அரசாங்கத்திலோ நாட்டிலோ தங்கியதல்ல. அது ஒவ்வொரு மனிதனிலும் இருந்து ஆரம்பிக்க வேண்டியதாகும். ஒவ்வொரு மனிதனினதும் பெறுமதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில காலத்திற்கு முன்பே மக்கள் ஆரம்பித்து விட்டார்கள் - வேறு உயிரினங்கள் இருக்கின்றனவா என்ற தேடலை. இதற்காக, பூமியில் இருக்கும் பொருட்களை எல்லாம் சேகரித்து விண்வெளி கிரகத்தில் வைத்து பிரபஞ்சத்திற்கு அனுப்பினார்கள். அனுப்பிய புத்தகங்களை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள: 416 431 5000 தமிழ்
1.877. 707 3221 Toll free
www.wopg.org www.tprf.org




• எல்லா வகையான காப்புறுதித்திட்டங்களும், அரச உதவி திட்டங்களும் (ODSP, Social Service) ஏற்றுக்கொள்ளப்படும்.

• தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேவைகள்

• நீண்ட நேரம் நிற்பதால் உங்கள் பாதங்கள் சோர்வடைகின்றனவா?
• தரமான பாதணிகள் இன்மையால் நடக்க, வேலை செய்ய கஷ்டப்படுகின்றீர்களா?
• நீரிழிவு . இரத்த ஓட்ட குறைபாட்டினால் ஏற்படும் விறைப்பு வலியால் அவதிப்படுகின்றீர்களா?
• பித்த வெடிப்பு, நகச்சுற்று மற்றும் பாத தோல் பிரச்சனைகளினால் அவஸ்த்தைப்படுகின்றீர்களா ?
• மூட்டுவலி, பாதவலியால் வருந்துகின்றீர்களா?

• ஆணிக்கூடு, பித்த வெடிப்பு மற்றும் பாத தோல் பிரச்சனைகள்
• நகச்சுற்று மற்றும் நகத்தில் ஏற்படும் பிரச்சனைகள்
• கணுக்கால், முழங்கால், குதிக்கால் போன்றவற்றில் ஏற்படும் வலிகள்
• நீரிழிவு நோய் பராமரிப்பு
• தட்டையான பாதம், வளைவு கூடிய பாதம் மற்றும் அனைத்து பாத அசாதாரணங்கள்

Our Services
• Custom Made Orthotics and Orthopedic Footwear
• Comfortable, Modern, Therapeutic Footwear
• Compression Stockings, Ankle, Knee and Back Braces

அனைத்து சேவைகளுக்கும் அழையுங்கள்
Call for appointments:
(905) 471-4000
25 Karachi drive, unit 29A
Markham, ON L3S 0B5
Email: solesolutions@hotmail.com

BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.


# Words...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

மற்றும் வேறு பொருட்களை, வேற்று கிரகத்து வாசிகள் எடுத்துப் பாவிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் செய்தார்கள்.

வேறு ஒன்றையும் செய்தார்கள். பல Antenna fix வைத்து பிரபஞ்சத்தில், வேறு கிரகங்களில், இருந்து ஏதாவது தொடர்புகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறதா என்றும் அவதானித்தார்கள். இதை ஏன் நான் உங்களுக்கு சொல்கிறேன்? வேற்று கிரகங்களில் உயிரினம் இருக்கிறதா இல்லையா என்ற வாதத்திற்கு நான் வரவில்லை. ஆனால் இந்த விண்வெளிக்கலம் வேற்று உயிரினங்களால் தொடர்பு கொள்ளப்படவில்லை. எத்தனை கோடி தொலைவில் தேடுதல் நடத்தியும், இந்த பிரபஞ்சத்தில் வேறு ஒருவரும் இல்லை. கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் இதுவரை ஒன்றும் இல்லை. நாம் மட்டுமே தான். நமக்கு நாமே அயலவர்கள். உலகத்தின் இந்த ஆறரை பில்லியன் மக்களும், நீங்கள், நான், எல்லோருமே, தேடுவது இந்த அமைதியை தான். வளமுடன் வாழத்தான். அழகான செழுமையான வாழ்க்கையை தான் நாம் தேடுகிறோம். இது ஒன்றும் அளவுக்கு மிஞ்சிய ஆசை இல்லையே. எங்களுக்கு ஒருவரை ஒருவர் தேவை என்ற புரிதலை நாம் எப்போது பெற்றுக் கொள்ளப்போகிறோம்? ஏனென்றால் எம்மைத் தவிர வேறு ஒருவரும் இல்லையே இந்தப் பிரபஞ்சத்தில். உங்களுக்கு தெரியுமா? ஒரு பாரிய அனர்த்தம் ஏற்படும் போது, ஒரு விமான விபத்தோ அல்லது வேறு பெரிய அசம்பாவிதமோ ஏற்படும்போது, அதில் பாதிக்கப்பட்டவர்கள், சரி சந்திப்போம்.. என்று சொல்லிவிட்டு பிரிந்து சென்றுவிட மாட்டார்கள். ஒன்றாக இணைந்து, நால்வரோ ஐவரோ, எப்படி உயிர் பிழைக்கலாம் என்று எண்ணி செயற்படுவார்கள் அல்லவா? அதேபோல் தான் நாமும், இந்த ஆறரை பில்லியன் மக்களும் ஒன்றாக இணைந்து எங்கள் துன்பங்கள், இன்பங்கள், இலக்குகள் எல்லாவற்றையும் பகிர்ந்து எம் மேம்பாட்டுக்காக கூட்டுச்சேர வேண்டி இருக்கிறது. அமைதி என்பது எங்களில் இருந்து விடுபட்டு இருக்கும் ஒன்றல்ல. மலை உச்சியில் சென்று ஒருவருடனும் பேசாமல் மௌனம் சாதிப்பதல்ல அமைதி. அமைதி என்பது தனிமைப்படுத்துவது அல்ல. அரவணைப்பது. உலகத்தின் எல்லா மனிதர்களையும் அரவணைக்க செய்வதுதான் அமைதி. எல்லோரையும் ஒன்றிணைப்பது, எங்கள் பேதங்களை மறந்து, எங்களுக்கு பொதுவான விடயங்களை அறிந்து, உணர்ந்து, ஒரு புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள அமைதி தேவை. பர்மாவிலோ, நேபாலிலோ, இந்தியாவிலோ வாழும் ஏழை விவசாயிக்கும் எனக்கும் தேவைப்படுகின்ற அந்த அமைதி, சாந்தி தான் தேவைப்படுகிறது. அமைதி, ஆனந்தம், ஒரு பயனுள்ள வாழ்வு வாழ்வதற்கான ஏக்கம். இன்று நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் எனக்கு கிடைக்கப்பெற்ற கௌரவத்திற்காக. ஆனால் இந்த சுதந்திரம், இந்த அமைதி உலகத்து மக்களுக்கெல்லாம் கிடைக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். ஒருவருக்கு ஒருவர் உதவ, ஒருவருக்கு ஒருவர் தீங்கிழைக்க அல்ல. அமைதி என்ற பதம் எங்களுக்கு அந்நியமான ஒன்றல்ல. இன்று அமைதி என்ற சொல்லுக்கு பலத்த மரியாதை இருக்கிறது. காரணம் இப்பொழுது நடைபெறும் யுத்தங்கள், யுத்தங்கள் முடிவடையும். மக்களும் மீண்டும் பழைய வழமைக்கு சென்றுவிடுவார்கள். என்னிடம் எவ்வளவு இருக்கிறது. எவ்வளவு உழைக்க வேண்டும். இப்படியே போகத் தொடங்கும். பின் மீண்டும் யுத்தங்கள் ஆரம்பிக்கும். நான் ஒன்றும் முன்கூட்டியே சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் சரித்திரத்தை பார்த்தால் தெரியுமே. மீண்டும் சீர்குலைவுகள் ஏற்படும். அப்பொழுது நான் இருக்கிறேனோ இல்லையோ. இன்னொருவர் வருவார். அமைதியை பற்றி பேசுவார். அதையும் மக்கள் இருந்து கேட்பார்கள். அமைதி என்பது ஏன் துன்பம் வரும் வேளைகளில் மட்டுமே பேசப்படுகிறது? அது நல்ல விடயமாக எனக்கு தெரியவில்லை. இடர் வருவதால் தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டுமா? முன்கூட்டியே கற்றல் நடை- பெற்றால் தானே துன்பத்தை தவிர்க்கலாம். அதனால்தான் என்னால் முடிந்தவரை நான் செய்ய முயற்சிப்பது. நான் நாடு விட்டு நாடு சென்று அந்த நாட்டு மக்களுக்கு சொல்வது இதுதான். அமைதிக்கான பொறுப்பு உங்களுடையது. தேவை உங்களுடையது. அமைதிக்கான மூலம் உங்களிடம் இருந்து தான் வருகிறது என்று. அவர்கள் விழிப்புணர்வு, புரிந்துணர்வு, இவைதான் அமைதிக்கான அடிப்படை. அப்படித்தான் இந்த பூமியில் அமைதி ஏற்படும் என்று சொல்கிறேன். அப்படி நடைபெறுமானால் அதுவே மனிதனின் மிகப்பெரும் சாதனையாக இருக்கும்.

எனக்கு தொழில்நுட்பம் மிகவும் பிடிக்கும். உண்மையில் மிகவும் அற்புதமான முன்னேற்றங்களை கண்டுள்ளோம். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவரிடம் அவரை பார்த்துக்கொண்டே பேசலாம். மிகவும் அற்புதமானது அல்லவா? எது எப்படி இருப்பினும், மனிதன் போய் வந்த இடங்கள், சந்திரன் உட்பட, மற்றும் இன்னும் போகப் போகின்ற இடங்கள், கண்டுபிடித்தவை, இன்னும் கண்டுபிடிக்கப் போகின்றவை, எல்லாவற்றையும் பார்த்தால் கூட, இவை எல்லாவற்றுக்கும் மேலான மிகப்பெரும் சாதனை... செல்போன்களாக இருக்காது... இந்த பூமியில் அமைதி கிட்டினால், அதுவே மிகப்பெரும் சாதனையாக இருக்கும். ஆனால் இந்த உலகத்தில் இரட்டைத்தன்மை இருக்கிறது. பலர் இருக்கிறார்கள். உலகத்தில் அமைதி ஏற்படமாட்டாது என்பதற்கு பத்து, இருபது, முப்பது, ஏன் ஆயிரம் காரணங்கள் சொல்லுவார்கள். ஏன் அமைதி இருக்க முடியாது என்பதற்கு காரணம் சொல்கிறார்கள். எவ்வளவு பேராசை இருக்கிறது உலகத்தில் என்கிறார்கள். நான் கனடாவிற்கு சென்று திரும்பும் பொழுது ஒரு உத்தியோகத்தர் கேட்டார் என்ன செய்தீர்கள் கனடாவில் என்று. நான் சொன்னேன் அமைதியைப் பற்றி பேசுவதற்காக சென்றிருந்தேன் என்று. அப்பொழுது அவர் சொன்னார்... அமைதியா.. அது ஒருபொழுதும் கிடைக்காது. உலகத்தில் அவ்வளவு பேராசை இருக்கிறது என்றார். அமைதி ஏன் கிட்டாது என்பதற்கு நீங்கள் சொல்லும் பத்து காரணங்களோ இருபது காரணங்களோ எல்லாவற்றையும் நான் மதிக்கிறேன். ஆனால் என்னிடம் ஆறரை பில்லியன் காரணங்கள் இருக்கின்றன உலகத்தில் ஏன் அமைதி வேண்டும் என்பதற்கு. ஆகவே என்னுடைய கணக்கு அவர்களை விட கூடியது. எங்களிடம் அற்புதமான அறிவு, தகைமை, விஞ்ஞானம் எல்லாம் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நாம் பாரிய கட்டிடங்களை அமைக்கிறோம். எத்தனையோ பயணங்களை மேற்கொள்கிறோம். சந்திரனுக்கு கூட சென்றுவிட்டோம். ஆனால் அமைதிக்கான அந்த அறிவு, அந்த விஞ்ஞானம், மனிதனில் இருக்கிறது. மனிதனுக்குள் மட்டுமே இருக்கிறது. என்னுடைய பார்வை வித்தியாசமானதாக இருக்கலாம். அல்லது இல்லாமல் விடலாம். பல அறிவு ஜீவிகள் வந்திருக்கிறார்கள். இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். நான் என்னை ஒரு அறிவு ஜீவி என்று கருதவில்லை. ஆனால் நான் முட்டாள் என்றும் என்னை கருதவில்லை. என்னிடம் ஒரு கருத்து இருக்கிறது. சிறு வயதிலேயே நான் அமைதி பற்றி பேச ஆரம்பித்தேன். மக்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். எனக்குள் அமைதிக்கான ஒரு தேவை இருக்கிறது. மக்கள் இதை விரும்பினார்கள். இன்றும், எத்தனையோ உரைகளை நான் வழங்கிய பின்னும் கூட, இன்னும் ஆர்வம் காட்டுகிறார்கள். இது ஒரு போதும் சலிக்காது. சலிக்கவும் முடியாது. ஏனென்றால், அமைதி என்பது, இந்த விடயம் என்பது, மிகவும் உற்சாகத்தை தரக்கூடியது. நாங்கள் எங்களால் ஆனா முயற்சிகளை செய்தால், இந்த பூமியில் அமைதி சாத்தியமா? இப்படி நினைப்பது உற்சாகமாக இருக்கிறது அல்லவா? இது நடக்குமா? ஆம். நிச்சயமாக. நிச்சயமாக நடக்கும். போர்கள் நடப்பது சாத்தியமானால் அமைதியும் சாத்தியமே. ஏன் சாத்தியமில்லை? இது மிகவும் உற்சாகத்துக் குரிய விடயம். ஆம். எங்களுக்குள் பல வேறு பாடுகள் இருக்கின்றன. ஆனால் வேறுபாடு களை நாம் அரவணைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மாங்கனியும் ஆப்பிளும் ஒரே மாதிரி சுவையாக இருந்தால் எப்படி இருக்கும்? கற்பனை செய்து பாருங்கள். எல்லா பழங்களும் ஒரே மாதிரி சுவையை தந்தால் எப்படி இருக்கும்? தினமும் வெவ்வேறு சுவைகளை வெவ்வேறு பழங்களை, வெவ்வேறு சுவை தரும் காய் கறிகளை நாம் அனுபவித்து ஏற்றுக்கொள்கிறோம் அல்லவா? இயற்கையின் இந்த இழையமைப்பு போல் தான் மனித இனத்தின் இழையமைப்பும். அந்த மிக மேலான மகிமை அந்த அமைதிக்கான தேடல், தேவை, அந்த பூர்த்தி நிலை ஆகும். இதுதான் என்னுடைய அந்தப்பார்வை. நீங்கள் இதை கருத்தில் கொள்வீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன். இதை நீங்கள் கருத்தில் கொள்வீர்கள் ஆனால், புரிந்துகொள்வீர்கள்.. அமைதிக்கான தடைகளை விடவும் அமைதிக்கான சாத்தியம் அதிகம் என்று.






யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# உலக...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

கார்டு) காண்பிக்கும் முறை இங்குதான் அறிமுகப்படுத்தப்பட்டது.

* முதன் முதலாக பிரேசில் அணி (1970) தொடர்ந்து மூன்று முறை உலக கோப்பை வென்று, தனக்கு சொந்தமாக்கியது.

* கடந்த 1982ல் மேற்கு ஜெர்மனி-பிரான்ஸ்



இடையிலான போட்டியின் முடிவுதான் முதன் முறையாக "பெனால்டி" முறையில் தீர்மானிக்கப்பட்டது.

* பைனலைப் பொறுத்தவரையில் 1994ல் இத்தாலி-பிரேசில் இடையிலான ஆட்டம் தான் முதன் முறையாக "பெனால்டி" முறையில் வெற்றி முடிவு செய்யப்பட்டது. இதில் பிரேசில் வென்றது.

* ஒரு போட்டியில் முதன் முறையாக ஐந்து கோல் அடித்த வீரர் என்ற பெருமையை ரஷ்யாவின் சலென்கோ (எதிர்-காமரூன், 1994) தட்டிச் சென்றார்.

* ஒரே தொடரில் (2002) தொடர்ச்சியாக ஏழு போட்டிகளில் வென்ற அணி, என்ற பெருமை முதன் முதலாக பிரேசிலுக்கு சொந்தமானது.

* உலக கோப்பை தொடரில் முதன் முதலாக பிரேசில் அணி 200 கோல்கள் அடித்து (91 போட்டி) சாதித்தது.

வரலாற்று வெற்றியை பதிவு செய்தது இலங்கை - தொடரை பறி கொடுத்தது இங்கிலாந்து

இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 100 ஓட்டங்களால் த்ரில் வெற்றியை பதிவு செய்துள்ளது. இதுவரை இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடர் வெற்றி ஒன்றினை பதிவு செய்யாத இலங்கை, இன்று அந்த சாதனையை பதிவு செய்துள்ளது.

உலக சாதனைகளை சமநிலைப்படுத்திய சங்கக்கரா, ஜெயவர்த்தனே

இலங்கை அணியின் ஜாம்பவான்கள் சங்கக்கரா, ஜெயவர்த்தனே இருவரும் டெஸ்ட் தரவரிசையில் சமநிலையான ஓட்டங்களை பெற்றுள்ளனர். இங்கிலாந்துக் கெதிராக 2வது டெஸ்டி போட்டியில் இவர்களது சாதனை சமநிலையை எட்டியது. சச்சின் 15,921 ஓட்டங்களில் முதலிடத்தில் உள்ளார். 2வது இடத்தில் பொண்டிங் (13378 ஓட்டங்கள்), 3வது இடத்தில் காலிஸ் (13289 ஓட்டங்கள்), 4வது இடத்தில் டிராவிட் (13288 ஓட்டங்கள்) மற்றும் 5வது இடத்தில் லாரா (11953 ஓட்டங்கள்) இடம் பெற்றுள்ளனர். 6வது இடத்தில் சங்கக்கரா, ஜெயவர்த்தனே 11493 ஓட்டங்கள் பெற்று சமநிலையில் இருக்கின்றனர்.







# கனடா தினம்



ஏற்றிடுவோம் கொடி ஏற்றிடுவோம்
ஏற்றதொரு நாள் இன்று எழுந்து நின்று
ஓ கனடா கீதம் இசைத்து கொடி
ஓங்கி வானில் பறந்திட ஏற்றுடுவோம்
வெள்ளை சிகப்பு வர்ணத்துணிமேலே
மேப்பிள் இலை சின்னம் பொறித்த
மேலைத்தேச கனடா நாட்டின்
தேசியக்கொடிதனை ஏற்றிடுவோம்

ஏதிலிகளாக ஓடி உள்ளே நுழைவோரை
ஏற்று அவர்களுக்கு உதவிகள் செய்யும்
காருண்ய நாடான கனடா நாட்டின்
தேசியக் கொடிதனை ஏற்றிவைப்போம்
பனி சூழந்த மூன்று பிரதேசங்களுடன்
பத்து மாகாணங்கள் கொண்ட நாட்டில்
பல்லின மக்களும் பரந்து வாழ்ந்திட
உண்ண உடுக்க இருக்கப்படுக்க உதவும்
தேசத்தின் கொடிதனை ஏற்றிவைப்போம்
கல்லூரிகளில் மாணவர்கள் கல்விகற்க
கட்டுபாடற்ற வயதெல்லை வழங்கியும்
கற்கைகள் கற்க கடனுதவி கொடுத்துதவும்
கனடா நாட்டின் கொடிதனை ஏற்றிடுவோம்

மருத்துவ சேவைதனை சகல மக்களுக்கும்
மகேசன் சேவைபோல் ஆற்றிவரும்
தேசத்தின் தேசியக்கொடிதனை ஏற்றி வைப்போம்
மனிதரைப்போல் மாக்கள் மேலும்
மனிதநேயம் காட்டும் மாண்புமிகு
கனடா நாட்டின் தேசியக் கொடிதனை
ஏற்றிடுவோம் போற்றிடுவோம் துதித்திடுவோம்!

*- கவிநாதம் ச. பரந்தாமன்*

# சார்பியல்

## 23ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆரம்பமாகியது என்றார். பெருஞ் சத்தம் என்பது பின்னராக நம்மவர்கள் பெரு வெடிப்பு எனக் கூறும் 'பிக் பாங்' (Big Bang) எனப் பெயர் பெற்றது. பெரு வெடிப்பு என்னும் பதம் எம்மிடையே பெருமளவிற் பாவிக்கப்படுகின்றது. ஆனால் அது பெரு வெடிப்புத்தானா என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும். பேரண்டம் பெரும் சத்தத்துடன் தோன்றியதே தவிர ஒன்றும் அங்கே வெடித்ததாகக் தெரியவில்லை. பிக் பாங் என்பதை நாம் 'பேரொலி' எனக் கூறுதல் பொருத்துமோ தெரியவில்லை. ஆயினும் பிக் காங் எனக் கூறுதல் வசத-ியாக இருக்கும். ளெமற்றவின் சிந்தனை கொள்கையாக முதலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பின்னராக வந்த விஞ்ஞானிகள் இதனை உறுதிப்படுத்தி, ஆரம்பப் பேரண்டத்தின் விபரங்களைத் தெளிவுபடுத்தியதின் பின்னராக, பிக்பாங் கொள்ளையானது இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகிவிட்டது.

பிக் பாங் நிகழ்ந்திருக்கக் கூடியதான காலத்தைக் கணித்துப் பார்த்தால் , அது கிட்டத்தட்ட பத்தாயிரம் மில்லியன் (10,000,000,000) ஆண்டுக்கும் இருபதினாயிரம் மில்லியன் (20,000,000,000) ஆண்டுக்கும் இடையில் எனவாகின்றது. ஆனாலும் பதின்மூவாயிரத்து எழுநூறு மில்லியன் (13,700,000,000) ஆண்டு முன்னதாகத்தான் பிக் பாங் நிகழ்வு நிகழ்ந்தது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காக இருக்கின்றது. எண்முறையிற் குறிப்பிடின், பிக்பாங்கின் ஆயிரத்து முன்னூற்று எழுபது கோடி ஆண்டு முன்னராக நிகழ்ந்தது என்று கூறுகின்றார்கள். நான் ஏற்கனவே கூறியபடி, புலச் சமன்பாட்டின் தீர்வுகள் இன்னமும் முழுமையடையவில்லை. இம்மட்டோடு நான்




நிறுத்திக் கொள்கிறேன். ஆர்வமுள்ளவர்கள் இதற்கு அப்பாலும் சென்று ஆராயுங்கள். ஆராய்வதொடு மட்டும் நிற்காது, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதனை நினைவிற் கொண்டு இலகு தமிழிலும் தாருங்கள். எம் சந்ததியினரும் இலகுவாக முடிவுகளைத் தெரிந்து கொள்ள.ட்டும்.

அடுத்த தடவையும் சார்பியலிற் சந்திப்போம்.




# திரை விமர்சனம் - முண்டாசுப்பட்டி

குறும்பட இயக்குநர்களின் புதிய அலையில் அடுத்த வரவு! நாளைய இயக்குனர்கள் திரையிடலுக்காக எடுத்த குறும்படத்தையே ஒரு சுவாரஸ்யமான முழு நீள திரைப்படமாக மெருகேற்றித் தந்திருக்கிறார்கள். 1947க்கு முன்பு, இந்தியா வெள்ளையர்கள் ஆட்சியின் கீழ் இருந்த காலம்... சத்தியமங்கலம் அருகேயுள்ள கிராமம் முண்டாசுப்பட்டி இந்த ஊருக்கு வரும் ஒரு பிரிட்டிஷ்காரர் அவ்வூர் மக்களை புகைப்படம் எடுக்கிறார். அப்போதே ஒரு பெண் இறந்து போகிறார். தொடர்ந்து அந்த ஊருக்குள் வேகமாக பரவும் அம்மை நோயால் ஊர்க்காரர்கள் பெரும்பாலானவர் கள் இறந்து போகிறார்கள். தொடர்ச்சியான இந்தச் சம்பவங்களால் புகைப்படம் எடுப்பது தெய்வத்துக்கு பிடிக்கவில்லை, அது 'தெய்வக்குற்றம்' என்ற நம்பிக்கை மக்களிடையே உருவாகிறது. இது தெரியா மல் அந்த பிரிட்டிஷ்காரர் மீண்டும் முண்டாசுப்பட்டிக்கு புகைப்படம் எடுக்க வருகிறார். அவரை கல்லால் அடித்து விரட்டு கிறார்கள் ஊர்க்காரர்கள். அன்றிலிருந்து, முண்டாசுப்பட்டிக்காரர்கள் யாரும் தங்களை புகைப்படமெடுக்க அனுமதிப்பதில்லை. ஆனால், ஒரு மனிதர் இறந்து பின்பு அவருடைய ஞாபகமாக மட்டும் இறந்தவர் உடலை படம் எடுத்து வைத்துக்கொள்கிறார்கள்.

இதற்கிடையில், ஒரு நாள் நள்ளிரவில் முண்டாசுப்பட்டி காவல் தெய்வமான சாமி சிலையை சில கள்வர்கள் திருட முயற்சிக்கிறார்கள். அதனைத் தடுக்க மக்கள் போராடுகிறார்கள். அப்போது, விண்ணில் இருந்து பறந்து வரும் விண் கல் ஒன்று கொள்ளையர் கூட்டத்தின் தலைவனைத் தாக்க அவன் அந்த இடத்திலேயே இறந்து போகிறான். அந்தக் கல்லை பீடத்தில் வைத்து 'விண் சாமி'' என்று வணங்கத் துவங்குகிறார்கள் ஊர்க்காரர்கள். சில வருடங்களுக்குப் பிறகு, 1982... முண்டாசுப்பட்டி பக்கத்தில் இருக்கும் பெரிய நகரமான சத்தியமங்கலத்தில் 'ஹாலிவுட் ஸ்டுடியோ' என்ற பெயரில் போட்டோ ஸ்டுடியோ வைத்திருக்கிறார் விஷ்ணு விஷால் (இவர்தான் கதாநாயகன்). இவரது உதவியாளர் காளி. சத்தியமங்கலம் அருகேயுள்ள



பள்ளியொன்றில் பன்னிரெண் டாம் வகுப்பு படிக்கும் மாணவி-களை புகைப்படம் எடுக்கும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கிறது. படம் எடுக்க பள்ளிக்குப் போகும் விஷால், அங்கே நந்திதாவைப் பார்க்கிறார். நந்திதாதான் கதாநாயகி. தமிழ்ச் சினிமா வழக்கப்படி நந்திதாவைப் பார்த்தவுடனே விஷாலுக்குள் காதல் விளக்கு எரிகிறது. நந்திதா ஊர் முண்டாசுப்பட்டி. ஊர் நம்பிக்கையின்படி புகைப்படம் எடுப்பதைத் தவிர்த்துவிடுகிறார் நந்திதா. இதனால், விஷால் மிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகி றார். இந்நிலையில் முண்டாசுப்பட்டி ஊர் தலைவரின் உடல்நிலை மோசமாகிறது. அவர் இறந்துவிடுவார் என்னும் நம்பிக்கை யில் புகைப்படம் எடுக்க விஷாலை அழைக்கிறார்கள். விஷாலும் முண்டாசுப்பட்டி வருகிறார். ஆனால், ஊர் தலைவர் உயிர் போகாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, அவர் சாகும்வரை காத்திருந்து, இறந்தபிறகு புகைப்படம் எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தத் தலைவரின் பேத்திதான் நந்திதா. எனவே, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அந்த ஊரிலேயே தங்கிவிடுகிறார் விஷால்.

ஒரு வழியாக ஊர்த் தலைவர் இறந்து போக, அவரது உடலை புகைப்படமெடுத்துவிட்டு திரும்புகிறார் விஷால். அந்தப் படத்தை 'பிரோசஸ்' செய்யும்போதுதான் அது தெளி வாக பதிவாகவில்லை என்பது விஷாலுக்கும் காளிக்கும் புரிகிறது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஆபத்பாந்தனாக வருகிறார் முனீஸ்காந்த். பார்க்க ஊர்த் தலைவர் போலவே இருக்கிறார். மிகப் பெரிய நடிகனாக வேண்டும் என்கிற லட்சியத்தோடு வாய்ப்பு களுக்காக அலைந்து கொண்டிருப்பவர். அவரிடம்,

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

பாரதிராஜாவின் புதிய படத்தில் பிண வேடத்தில் நடிக்க ஆள் வேண்டும் என்று பாரதிராஜா கேட்பதாக சொல்கிறார் கள். முனீஸ்காந்துக்கும் அந்த வேடத்தில் நடிக்கலாம் என ஆசை வருகிறது. பாரதிர ராஜாவிடம் கொடுப்பதற்காக வேண்டும் எனச் சொல்லி, அவரை பிணமாக நடிக்க வைத்து புகைப்படம் எடுக்கிறார்கள். அந்தப் படத்தை ஊர்த் தலைவர் படம் என்று முண்டாசுப்பட்டிக்காரர்களிடம் கொடுத்துவிட லாம் என்ற நம்பிக்கையில் அங்கே போகிறார்கள். அங்கே விஷாலுக்கும் காளிக்கும் அதிர்ச்சி காத்திருக்கிறது. முனீஸ்காந்த் சித்தப்பாதான் இறந்துபோன ஊர்த் தலைவர். பார்த்தவுடனே, தன் படத்தைதான் ஊர்த் தலைவர் படம் எனக் கொடுத்திருக்கும் உண்மை அவருக்குத்

**தொடர்ச்சி 35ஆம் பக்கம்**



FWD

Condominiums

in

# Downtown Toronto




**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E, #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# சார்பியல் - 48

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### பிக்பாங்

இப்போதைக்கு எங்களைப் பொறுத்த வரையில் ளெமற்ற அப்படி ஒன்றும் பெரிய-தாகச் சிந்திக்கவில்லை என்றேதான் தோன்றும். ஆனால் அவர் அப்படி யோசித்துப் பார்த்தார். விரிவடைந்து கொண்டிருக்கும் பேரண்டம் என்றால், அவ்விரிவிற்கு ஒரு ஆரம்பம் இருக்க வேண்டுமே என்பதுதான் அவரது எளிய சிந்தனை. இச்சிந்தனையுடன் ஆரம்பமானது தான் ‘பேரண்டத்தின ஆரம்பம்’ என்ற புதிய கருத்து. பொதுச் சார்புக் கொள்கையின் சமன்பாடுகளின் தீர்வுகளின் அடிப்படையில் கணித நிபுணரான அந்த மதப் போதகர், எங்களது பேரண்டம் ஒரு புள்ளியாக இருந்து தான் விரிவடைந்தது என்ற நிறுவலைக் காட்டினார். அவரது உரையினைக் கேட்ட அயன்ஸ்ரைன் ‘எனது வாழ்நாள் இப்படியான ஒரு அழகான விளக்கத்தினைக் கேட்டதில்லை’ என்றாராம்.

ளெமற்றவின் இந்த பேரண்டத்தின் ஆரம்பம் என்ற கருத்து உடனடியாகவே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சமுதாய மட்டத்திலும், விஞ்ஞானிகளிடமும் இருந்தும் இதற்குப் பெரிய எதிர்ப்புகள் தோன்றின. சோவியத்ரசியா போன்ற பொதுவுடகைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடுகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பினை ஆரம்பப் பேரண்டம் என்ற கருத்து சம்பாதித்துக் கொண்டமு. மதக் கொள்கைக்கு இது மிகவும் அனுசரனையாக இது உள்ளது என்பதே இவர்களினது எதிர்ப்புக்கு முக்கிய காரணியாக இருந்தது. எடிங்ரன் போன்ற பிர-பலமான வானவியலாளர்கள் பேரண்டம் ஆரம்பத்தில் நியைான ஒன்றாக இருந்து பின்னர் விரிவடைந்து கொண்டு போய்க் கொண்டிருக்கலாம் என்ற கருத்தினை முன்வைத்தார்கள். அவர்களது கருத்துப்படி, ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையிலான விண்மீன்களைக் கொண்ட தொகுதியாக இருந்த பேரண்டமே பின்னர் விரிவடையத் தொடங்கி, இன்று இந்த நிலைக்கு வந்திருக்க வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் ளெமற்றி பேரண்டமானது ஒரு சின்னஞ் சிறிய புள்ளியில் இருந்துதான் ஆரம்பித்தது என உறுதியாகக் கூறினார்.

விரிவடையும் பேரண்டத்தின் விரிவினை பின்புறமாக நகர்த்திப் பார்த்தால், அதாவது நேரத்தைக் குறைத்துக் கொண்டு போய்பார்த்தால் என்ன நிகழும் என்பது அவரது சிந்தனையாக இருந்தது. முதலில் பேரண்டமானது சுருங்கிக் கொண்டு, அதாவது சிறியதாகிக் கொண்டு போவது போலத் தோன்றும். அதனால் நாற்பரிமாண வெளியின் வளைவானது அதிகரித்துக் கொண்டு போகும். இதனால் எல்லா விண் மீன்களும், இப்போது விலத்திக் கொண்டு இருப்பது போல், மறுதலையாக நெருங்கிக் கொண்டு வருவது போல இருக்கும். இப்படியே நேரம் இன்னமும் பின்நோக்கிக் கொண்டே போக, பேரண்டத்தினுள் உள்ள எல்லாம் ஒன்றுடன் ஒன்று நெருங்கி வந்து, ஒன்றுடன் ஒன்றாகக் கலந்து ஒன்றாகி, சிறிய தாகிக் கொண்டே போய் ஈற்றில் ஒரு புள்ளியிற்கு வந்து சேரும். அந்த தனிப் புள்ளியினைப் பார்த்தால், வித்தியாசமான-தாக இருக்கும். அதன் வெளியின் வளைவானது முடிவிலியான பெரியதாக இருக்கும். அப்புள்ளியின் பருமனைப் பார்த்தால், ஒரு குண்டூசின் நுனியினைவிடச் சிறியதாக, அணுவின் கருவினைவிடச் சிறிய தாக இருக்கும். இன்று பேரண்டத்தினுள் இருப்பவை எல்லாமுமே அந்தச் சிறிய ஒன்றினுள்தான் அடங்கிப் போய் ஏதோவாக இருக்கும். பெரும் பாரமான அந்தப் புள்ளியின் அடர்த்தியும் (செறிவெனக் கருதலாம்) முடிவிலியாகவே இருக்கும். இந்தப் புள்ளியை ஆங்கிலத்தில் singularity என்றார்கள். பேரண்டத்தின் எல்லாமுமே ஒன்றாகிக் கலந்து ஒன்றான புள்ளி என்பதால் அதனை ஒருமம் என்கிறேன்.

பேரண்டமானது முடிவிலி வெளிநேரப் பரி-மாணம் உடையதும் சகலதுமே தனிஒரு சக்திச் சொட்டாக (Quantum Energy) இருந்த, இந்த ஒருமத்தின் நிலைக்கு அப்பாலும் நேரத்தினை இன்னமும் பின்நோக்கிக் கொண்டு போக முடியாது. எனவே, இந்த நிலையில்தான் நேரம் பூச்சியம் ஆகின்றது. இந்நிலையில் இருந்து தான் பேரண்டத்தின் நேரம் ஆரம்பித்து இருக்கின்றது. அதாவது அதனை “நேற்று என்பது இல்லாத நாள்” என்பார்கள். இந்த ஒருமத்தினை ளெமெற்ற ‘ஆதியுரு அணு’ (primodial atom) என்றார். ஆதியுரு அணு என்பதற்காக அதனை ஏதோ அணுவினது பருமனிற் பார்க்கக் கூடாது. அணுக்கருவினை யும் விடச் சிறியதாக இருக்கவேண்டும் என்ற எண்ணம்தான் உள்ளது. கற்பனையே பண்ணிப் பார்க்க முடியாத இந்தச் சின்னஞ் சிறு ஆதியுரு அணுவானது ஏதோ காரணத்தால் ‘பெருஞ் சத்தம்” உண்டாக்கிய படியே பீறிட்டுக் கொப்பளிக்கத் தொடங்கி விரிவடையத் தொடங்கப் பேரண்டம் பிறந்தது என ளெமற்ற கூறினார். பீறிட்டுக் கொண்டு கொப்பளிக்கத் தொடங்குகையிலேயே நேரமும் பேரண்டத்துடன் சேர்ந்து

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 20ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



# தோள்பட்டை வாதத்திற்கு தீர்வு காண்போம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *Ending Shoulder Pain*

மனித உடலானது பல்லாயிரம் நரம்புகளினாலும், தசைகளாலும், இரத்த நாளங்களாலும் எலும்புகளாலும் பின்னிப் பிணையப்பட்டதாகும். இப்படி இயற்கையால் உருவான மனித இனம் நோய்களின் பிடியில் சிக்கி தவிக்கிறது. குறிப்பாக முதுகுவலி, கழுத்துவலி, கை கால் மூட்டுவலி போன்றவற்றால் பலரும் அவதிப்படுகின்றனர். பொதுவாக நீரிழிவு, இரத்த அழுத்த நோயாளிகள் இத்தகைய நோயின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். இந்த வகையில் கழுத்துவலி என்ற தோள்பட்டைவலி பலரையும் பாதிக்கின்றது.

மனித உடலின் தலைப்பகுதிதான் மனிதனின் ஐம்புலன்களை இயக்கும் தலைமைச் செயலகமாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க தலைப்பகுதியை உடலோடு இணைக்கும் பாலம்தான் கழுத்துப்பகுதி. இதனூடாகத்தான் உடலுக்கும் தலைக்கும் நரம்புகள், இரத்த நாளங்கள் செல்கின்றன. எனவே இந்த கழுத்துப்பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் அன்றாட வாழ்க்கையே கடினமாகி விடுகின்றது. இது பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர்களுக்கே ஏற்படுகிறது. இதை ஆங்கில மருத்துவத்தில் Cervical Spondylosis என்கின்றனர். இதை சித்த வர்ம மருத்துத்தில் தோள்பட்டை வாதம் என்று அழைக்கின்றனர்.

### தோள்பட்டை வாதம் வரக் காரணங்கள்

செரியாமை, மலச்சிக்கல், வாயுக்கோளாறு, குடல் சூடு, மூலச்சூடு, அதீத சிந்தனை, மன அழுத்தம், ஒரே இடத்தில் அமர்ந்து அதிக நேரம் வேலை செய்தல் போன்றவற்றால் இது வரலாம்.

நேரம் கடந்த உணவு, எளிதில் ஜீரணமாகாத உணவு, கோபம், பயம், எரிச்சல் என்பன உள்ள போது உண்பது. நீண்டநாள் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பது. பித்தத்தை அதிகரிக்கும் உணவுகள், வாயுவை அதிகரிக்கும் உணவுகள் என பலவழிகளாலும் தோள்பட்டை வாதம் உண்டாகின்றது. மோசமான உணவு முறையாலும், தொடரும் மலச்சிக்கலாலும் அபானவாயுவானது மேலெழுந்து சிரசை அடைந்து நீர்கோர்த்து பின் தலையின் பின்புறமாக இறங்கி கழுத்து பகுதிக்கு வரும்போது அங்கு தசைகளையும் நரம்புகளையும் இறுக்கமடையச் செய்கின்றது. இதனால் கழுத்திலும் தோள் பட்டையிலும் வலியை உண்டாக்குகின்றது.

### தோள்பட்டை வலியைப் போக்க

மருத்துவர்களின் ஆலோசனைப்படி



நாய்களின் செவிப்புலன் மிகவும் சக்தி வாய்ந்தது. சாதாரணமாக 40 Hz முதல் 6,000 Hz கேட்கும். சத்தம் எங்கிருந்து வருகிறது என்று அறியும் சக்தியும் உள்ளது. 18 வகையான தசைநார்களைக் கொண்ட நாய் எல்லாவற்றினையும் செயல்படுத்தும் ஆற்றல் கொண்டது. அத்துடன் மணத்தினை இலகுவில் அறிந்து கொள்ளும். மனிதனை விட 40 மடங்கு மணத்தினை அறிந்துகொள்ளும் திறன் நாய்க்கு உண்டு. 125 - 220 மில்லியன் மணத்தை உணரும் உள்வாங்கி கலங்களைக் கொண்டது. Bloodhound என்ற நாய் இனம் 300 மில்லியன் உள்வாங்கு கலங்களைக் கொண்டது. பல்வேறு இரத்தக் கொலைக-ளை கண்டறிவதில் இவ்வகை நாய்களையே பயன்படுத்துகின்றனர். எந்த திசையில் இரத்தம் உள்ளதென்பதனையும் அறியும் ஆற்றல் இவைக்கு உண்டு.

நாய்களின் உடல்நலம் மிகவும் முக்கியமானவை. முழங்கால், இடுப்பு, குருடாதல், காது கேட்காமை, Pyometra, Bloat என்பன கடுமையான நோய்களாகும். நாய்களுக்கு கடும் நிறமான சொக்கிளேற்றுகள் கொடுத்தால் சிலவேளை அதன் உயிருக்கே ஆபத்தாகிறது. 10 - 13 வருடங்களே நாய்களின் ஆயுட்காலமாகும். Bloodhounds, நாய்கள் 6-7 வருடங்கள் உயிர் வாழும். ஆனால் Japanse Spitz, Tibet Spaniel நாய்கள் 14-15 வருடங்கள் உயிர்வாழும். 1939 இல் Bluesy என்ற பெயர்கொண்ட நாய் 29.5 வருடங்கள் வாழ்ந்துள்ளது. எனினும் கின்னஸ் புத்தகத்தில் (டிசம்பர் 2011) உலகில் கூடிய காலமாக 29.5 வருடங்கள் Puke என்ற நாய் பதியப்பட்டுள்ளது.

மிருக உலகில் மிகவும் நுண்ணறிவு படைத்தது நாய் ஆகும். நாய்கள் அவதான சக்தி, மீள்பதிவு கொள்ளல் என்பவற்றில் சிறந்தவை. 8 கிழமையுள்ள நாய்குட்டிகள் பொருட்களுடன் விளையாட ஆரம்பித்து விடும். மனிதர்களின் வாய் அசைவுகளைப் பார்த்து செயல்படும் சக்தி நாய்களுக்கு உண்டு. ஒரு பொருளை எறிந்தால் அதனை கௌவிக்கொண்டு வந்து கொடுக்கும். இப்படி தொடர்ந்து விளையாடுவதில் குதூகலம் கொள்ளும். 'இரு' என்றால் இருக்கும். 'படு' என்றால் படுக்கும். ஒருவரின் வலது முகத்தைப் பார்க்க இடது பக்கம் திரும்பும். இடது பக்க முகத்தை பார்க்க வலது பக்கம் திரும்பும். Stanley Coren என்ற நாய் உளவியலாளர், நாய்கள் சாதாரணமானவர்களை விட கூடுதலான புத்திசாலித்தனமாக செயல்படுகின்றன என்கிறார். Border Collie இன நாயான 'Chase' என்ற நாய் 1022 பொருட்களை 3 வருடப்பயிற்சியின் பின்னர் கற்றுக் கொண்டதாக ஆய்வில் உள்ளது. நாய் சாதாரணமாக 10.1 மணிநேரம் நித்திரை செய்யும். மனிதரை விட கூட நேரம் நித்திரை கொள்ளும்.

பல சமயங்களிலும் நாய்களை தொடர்பு படுத்தியுள்ளனர். கிரேக்க புராணங்களில் 3 தலையுள்ள நாய் இறந்த உயிர்கள் உள்ள இடமான (Hades) வாசல்களை பாது காக்கிறது. Noare புராணம் 4 கண்ணுள்ள Garmer என்ற நாய் நரகத்தினைப் (Helhein) பாதுகாக்கிறது என்று கூறுகிறது. பாரசீகப் புராணம் 4 கண்களுள்ள நாய் Chinvat Bridge காக்கிறது என்கின்றது. இந்து புராணத்தில் மரணதேவனான யமன் 4 கண்கள் கொண்ட 2 நாய்களை கொண்டவர் என்பர். அதுவே நரகலோகத்தை காப்பதாக நம்புகின்றனர். யூதமதமும், இஸ்லாமும் நாய்கள் துப்பரவற்றவை என்பர். கிறீஸ்தவம் நம்பிக்கையின் பிரதிநிதியே நாய்கள் என கூறுகிறது. சீனா, கொரியா, ஜப்பான் ஆகியவை நாய் நல்ல பாதுகாப்பானவை என்கின்றன. சீனர்களின் கலண்டரில் இராசிச்சக்கரத்தில் 'Zodiacal Dogs' பிரதிநிதித்துவம் செய்கிறது.

நாய்களின் செய்கைகள் மிகவும் விசித்திர மானவை. சிலவேளைகளில் திடீரென வீட்டுக்குள் குரைத்தால் அவைக்கு ஏதோ விரக்தியென்று கொள்ளலாம். வாய் பேசாத ஜீவராசிகளின் பேச்சு குரைப்பது மட்டும் தான். தண்ணீர் வேண்டும். பிஸ்கட் வேண்டும் என்பதை அப்படிதான் கேட்கும். கீழே இருக்கச் சொன்னாலும் குரைக்கும். சில திடீர் உணர்வுகளாலும் குரைக்க கூடும். சரியான கட்டளைக்கு கீழ்ப்படியும் தன்மை நாய்களிடம் அதிகம் உள்ளது. தனது வீட்டுக்காரர்களிடம் நன்றாக கீழ்ப்படியும். அவர்கள் வீட்டுக்குள் வந்துவிட்டால் மகிழ்ச்சியில் அங்குமிங்கும் ஓடும். வீட்டுக்காரர் எங்காவது தூரம் போய்விட்டால் ஏதாவது ஒரு இடத்தில் உண்ணாமல் படுத்துக்கொள்ளும்.

அற்லான்ரா பல்கலைக்கழக விஞ்ஞானி ஒருவர் மனிதரைப்போல நாய்களும் மனஎழுச்சியுள்ளவை. நாய்களின் MRI (Magnetic Resonance Imaging) சோதனை மூலம் மனிதரைப் போலவே அவற்றின் மூளையும் செயல்படுவதாக கூறியுள்ளார். நாய்கள் சிறுநீர் கழிப்பதற்கு இடம் ஒதுக்கினால் அங்கு சென்றே அதனை நிறைவேற்றும். தங்கள் வீட்டுக்காரர் வீடு திரும்பும் நேரத்தில் கண்ணாடியூடாக பார்த்துக் கொண்டிருக்கும். யாராவது அந்நியர்கள் வீட்டுக்கு வந்து சத்தம் போட்டு கதைத்தால் அதற்கு பிடிக்காது.



நாய்களுக்கு பெயர் வைப்பதே ஒரு முக்கிய நிகழ்வாகும். பிள்ளைகளுக்கு பெயர் வைப்பது போல் இதுவும் ஒரு முக்கியத்துவ நிகழ்வு. ஆண், பெண் பிரிவுக்கு ஏற்றவாறு பெயர்களும் அமையும். முன்பு உலகில் புகழ் பெற்றவர்களின் பெயர்களை நாய்களுக்குச் சூட்டினர். பொனபாட், தாச்சர், கெல்லா, கோதே இப்படி பல. சில நாய்களுக்கு குடிவகைகளின் பெயர்களை வைத்துள்ளனர். ஆண்நாய்க்கு ஜோனி வோக்கர், சாம்பேர்ஸ் போன்ற பெயர்களும் பெண் நாய்களுக்கு சம்புகா (Sampuha), Shandy போன்ற பெயர்களும் வைத்துள்ளனர். எழுத்தாளர்களின் பெயர்க ளான Gruber, Agatha, Harper வைக்கப் பட்டுள்ளன. உற்பத்திப் பொருட்களான ஜீப், றூம்பா, சாஸ்தா, பெஸ்லி, தொழில்நுட்ப பெயர்களான Java, Beta, Icon, Veetor போன்ற பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நாய்களின் கிராமம் (Dogs village) பெயரில் பல சேவைகள் உள்ளன. காப்புறுதி வழங்கல், வைத்தியசேவை, தினசரி பராமரிப்பு, பயிற்சி முகாம்கள், நாய்களின் இறக்குமதி சேவை என்ற பல்வேறு முறைகளில் வசதிகள் உள. நாய்களுக்கு பெயர் சூட்டுவதற்கென்றே பல நிறுவனங்கள் உள. ஐக்கிய அமெரிக்காவில் எடுக்கப்பட்ட நாய்களின் பெயர்களின் தரவரிசையில் முதலிடம் பெற்ற ஆண் நாயின் பெயர் மக்ஸ் (Max) என்பதாகும். பெண்நாய் மொரி (Molly) என்பதாகும். 1996-2014 வரை எடுக்கப்பட்ட நாய்களின் பெயர் வரிசையை 'Baby names com' தயாரித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதிகள் அனைவரும் நாய்ப் பிரியர்களாவர். தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நாய்க்கு 'Bo' என்ற பெயர். முன்னாள் ஜனாதிபதி ஜோர்ச் புஷ்சின் நாயின் பெயர் 'Barney' என்பதாகும். பில் கிளின்ரனின் நாயின் பெயர் 'Buddy' என்பதாகும். அவருக்கு முன்பிருந்த ஜோர்ஜ் புஷ்சின் நாய்க்கு பெயர் 'Millie' என்பதாகும். ஆங்கிலம் பேசும் உலக நாடுகளில் இப்போதும் Max, Molly என்ற பெயர்களே பிரசித்தி பெற்றுள்ளன.

உலகிலுள்ள சிறந்த நாய்கள் 250 சொற்களையும் சைகைகளையும் புரிந்து கொள்ளும். சனநடமாட்டமுள்ள பகுதியிலும் ஆபத்தில்லாது நடந்து செல்லும். நாய் ஒன்று ஆப்கானிஸ்தானில் 50 அமெரிக்க போர்வீரர்களை மோப்ப சக்தியால் பாதுகாத்துள்ளது. நியூசிலாந்தில் நாய் வடிவில் ஒரு கட்டிடமே உள்ளது. Nakio என்ற நாய் கொலராடோவில் 4 கால்களை யும் இழந்தது எனினும் பொய்க்கால்கள் பொருத்தப்பட்டு எல்லா வேலைகளையும் அது செய்கிறது. நாயின் மூக்கு திரும்புவதை அதன் மூக்கில் உள்ள ஈரப்பதன் காட்டி விடும். அந்த திசையில் வரும் மணத்தினை அறிந்து கொள்ளும் ஆற்றல் அதற்குண்டு. நாய் தண்ணீரை குடிக்கும் போது நாக்கினை கீழ்ப்பக்கமாக சுருட்டியே உட்செலுத்தும்.

பேராசிரியர் நா. நாராயணன் (தாகூர் கலைக்கல்லூரி) தனது ஆய்வு எது? ஏன்? எப்படி? என்ற நூலினை தனது வளர்ப்பு நாய்க்கு சமர்ப்பணம் செய்துள்ளார். அவரது வரிகளில் 'நீ நாயல்ல! என் தாய்! பன்னிரண்டு ஆண்டுகள் உறவாய், தோழனாய் நடந்து நடந்து, அமர அமர்ந்து, நிற்க நின்று வாலாட்டி மகிழ்ந்த ராசா உன் நினைவுகளுக்கு இம்மலர் சமர்ப்பணம். இதனை விட நாயின் பெருமையை சொல்ல ஏது வரிகள்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# Malayal Bhagawathi Joythidam

# Pandit Tulsidhar Swamiji





***100% GUARANTEED RESULT***

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

**பிளெக்**
**மஜிக் 3 நாட்களுக்குள் அகற்றி பதுகாப்புக் கொடுக்கப்படும்**

*GTA Square Mall (2nd Floor)*
*5215 Finch Ave. E., Unit #257*
*Scarborough ON M1S 0C2*
*(FINCH & MIDDLEFIELD)*

**Tel.:647.856.0559**

**OPEN 7 DAYS A WEEK - 10 AM - 8 PM**

# நாம் வாழும் நாடு - கனடா

வட அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள நாடு கனடா. அது அமெரிக்காவிற்கு வடக்கேயும், அற்லான்ரிக், பசுபிக் மற்றும் ஆர்ட்டிக் சமுத்தி ரங்களுக்கு இடையேயும் உள்ளது. கனடா ஒரு கோடி சதுர கிலோமீற்றர் பரப்பளவை கொண்டது. இது உலகிலேயே இரண்டாவது பெரிய நாடு.

மூன்றரை கோடி மக்களை கொண்ட கனடா உலகில் சனத்தொகையில் 37ஆவது பெரிய நாடு. கனடாவின் ஆதி குடிவாசிகளை "பூர்வீக குடிமக்கள்" என அழைப்பர். சிலவேளை நீங்கள் அவர்களை "எஸ்கிமோ" என்றோ "செவ்விந்தியர்கள்" என்றோ கேள்விப்பட்டிருப்பீர்கள்.




பூர்வீக குடிமக்களில் 60 க்கு மேற்பட்ட இனங்கள் உண்டு. அவர்களது 11 விதமான மொழிகள் 65 வெவ்வேறு விதமான பேச்சு வழக்கில் பேசப்படுகின்றன. கனடாவின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பூர்வீக குடிமக்களின் வழித்தோன்றலாக இருந்தாலும், முதற்குடிமக்களின் மொழிகளை இரண்டு இலட்சம் மக்களே பேசக்கூடியதாக உள்ளனர்.

சென். லோறன்ஸ் ஆற்றங்கரையில் வாழ்ந்து மறைந்த பூர்வீக குடிமக்களின் "Iroquois" மொழியில் "கிராமம்" என்ற கருத்துள்ள "Kantata" என்ற சொல் தான் காலப்போக்கில் கனடாவாக மாறியது. கனடாவின் வடபகுதியில் மக்கள் கிறிஸ்து பிறக்க 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்து வந்தார்கள் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. உலகிலேயே வடமுனைக்கு மிக அருகில் மனிதர் வாழும் இடம் கனடாவில் அலேற் (Alert) என்ற கிராமம் ஆகும். இது வட துருவ புள்ளியிலிருந்து 800 கிமீ தெற்கிலிருக்கிறது.

கனடா 10 மாகாணங்களும், 3 பிரதேசங்களுமாக 13 அரசியல் பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 4 மாகாணங்கள் தான் கனடா 1867 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதியில் உருவாக்கப்படும் பொழுது இருந்தன. அந்நாளே கனடாவின் பிறந்த தினமாக கொண்டாடப்படுகிறது.

கனடாவில் 3 நிலை அரசாங்கங்கள் உள்ளன. அவை நகரசபைகள், மாகாண அரசுகள் மற்றும் மத்திய அரசு ஆகும். கனடாவில் 308 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றம் உள்ளது. இது கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவில் உள்ளது. தற்பொழுது கனடாவில் பழமைவாதக்கட்சி அரசில் உள்ளது. பிரதமராக மதிப்பிற்குரிய ஸ்ரீபன் காப்பர் இருக்கிறார்.

கனடா ஒரு பல்கலாசார நாடு. இங்கு ஆங்கிலமும், பிரெஞ்சும் தான் அரச மொழிகளாக இருந்தாலும், 200 க்கு மேற்பட்ட மொழிகள் கனடாவில் தாய் மொழியாக பேசப்படுகின்றன. 55 இலட்சம் மக்கள் வாழும் ரொறொன்ரோ மாநகரில் மட்டுமே 140 மொழிகளை தாய் மொழியாக கொண்டவர்கள் வாழ்கின்றனர். இவர்களில் அரைவாசிப்பேர் கனடாவில் பிறக்காதவர்கள். இப்படியான பல்கலாசார நாட்டில் தமிழ் பண்பாட்டுடன் வாழ்வதில் நாம் பெருமைப்படவேண்டும்.

**வாழ்க தமிழ் மொழி!**
***Long Live Canada!***
***Mutliculturalisme Toujours!***



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# பிரிவுத்துயரில் துன்புறும் தலைவி பற்றி தலைவனிடம் எடுத்துரைக்கிறாள்

## சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

மருதத்திணையில் கயமனார் என்னும் புலவர் தோழி தலைவனுக்கு அறிவுரை வழங்குதாகப் பாடியுள்ள பாடல் தலைவிக்கு நேர்ந்த துன்பத்தை அவள் படும் துன்பத்தை அதாவது காதலால் அவள் படும் விரக வேதனையை மறைபொருளால் உணர்த்துவதாக அமைகின்றது இந்த மருதத் திணைப் பாடல்.

எனது அன்புத் தோழியோ மிகவும் நல்ல பண்பு உடையவள். கருமை நிறம்பொருந்திய மேனியை உடைய மிகவும் அழகானவள். பெட்டியிலே வைக்கப்பட்ட புத்தம் புது மலர்போன்று அணியப்படாது வாடி அழகிழந்து போவதுபோன்று அவளது உடலும் உனது பிரிவால் வாடிப்போயுள்ளது. அழகிழந்துள்ளாள். தாமரைத் தடாகத்தில் நிற்கும் தாமரைமலர்கள் பசுமைநிறைந்த நிறத்துடன் உள்ள இலைகளுக்கு மேலாக மிகவும் உயரமான தண்டினை உடையனவாக உள்ளன. மீன் கூட்டங்களை உடைய உப்பு நீர்க்குளங்களில் கடல் நீர் பெருகி வருகின்றது. நெய்தல் நிலத்துத் தலைவன் பிரிந்து செல்லும் கொடுமையை அவள் எம்மிடம் மறைந்துவிடுகின்றாள். உண்மையில் அவள் உப்பு நீர்த்தடாகத்தில் குளிப்பதனால் அவளது கண்கள் எரிவூட்டுகின்றன, துன்புறுத்துகின்றன. அதனைப் போன்று உனது பிரிவென்னும் கொடுந் தன்மை அவளின் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்துகின்றது. ஆனால் அவளோ அதனை எமக்கு எடுத்துக்கூறாது எம்முன்னே அவமானப் பட்டு அதனை மறைத்துக் கொள்வாள் எனக்குறிப்பிடுகின்றார் புலவர்.

யாய் ஆகியவளே மாயோளே
மடை மாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இன மீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம் முன் நாணிக் கரப்பு ஆடும்மே.
(குறுந்தொகை 9, கயமனார், மருதம்)

(யாய் ஆகியவளே – நல்ல பண்பு உடையவள், மாயோளே – மாமை நிறத்தை உடையவள், மடை – பூண், மாண் – மாட்சியுடைய, செப்பில் – பெட்டியில், தமிய – தனியாக, வைகிய – வாடிய, பெய்யாப் பூவின் – அணியாத மலர்களைப்போல், மெய் சாயினளே – உடம்பு வாடியவள், பாசடை – பசுமையான இலைகள், நிவந்த – மேலே, கணைக்கால் – பெரிய காம்பு, நெய்தல் – குவளை மலர்கள், இனமீன் – மீன் கூட்டம்,



இருங்கழி – உப்புத்தண்ணி குளங்கள், ஓதம் – வெள்ளம், மல்கு தொறும் – நிறையும் பொழுது, கயம் மூழ்கு மகளிர் – குளத்தில் குளிக்கும் பெண்கள், கண்ணின் மானும் – கண்களைப் போன்று, தண்ணந் துறைவன் – நெய்தல் நிலத்தலைவன், கொடுமை – கொடுமை, நம் முன் நாணி – நம் முன்னால் அவமானப்பட்டு, கரப்பு ஆடும்மே – அதை மறைப்பாள்)

நெய்தல் நிலம் கடலோர மக்களது வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டுகின்ற காட்சிகளில் பிரிவு என்பது பொருள்தேட வணிகர்களோடு ஆபத்து நிறைந்த பயணத்தை மேற்கொள்ளும் நிலை. இதற்காகப் பிரிந்து செல்வது வழக்கம். ஆனால் மணமாகி அதற்குள்ளாகவா இந்தப் பிரிவு. எந்தப்பெண்ணைத்தான் அந்தப்பிரிவு துன்புறுத்தாது விடும். அவன் செல்லாது என்னோடு இருந்துவிடலாகாதா என ஏங்குவது இயல்பு. ஆனால் பொருள்தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றதே. தானியக்களஞ்சியத்தில் நிரப்பிவைக்கப்பட்ட தானியம் எடுக்க எடுக்கக் குறைவடைந்து செல்லுமன்றோ? எனவே பொருளைச் செலவிடுவது போன்று சேகரிக்கவும் வேண்டுமன்றோ? தலைவன் அதற்கு விதிவிலக்கா? ஆனால் தலைவியின் துயரமும் நியாயமானது தான். இதற்கு நடுவே ஊசலாடும் மன நிலையை புலவர் எடுத்துரைக்கும் திறன் வியப்பிற்குரியது. இயற்கையின் வனப்பினை ஒப்புநோக்கி அதனூடாக உள்ளத்துணர்வை வெளிப்படுத்தும் திறன் சங்கப் பாடல்களில் மலிந்து வளம்பெருக்குவதனைக் காணலாம்.

# Education

## Answer Key : 14-11

### Calculus 12

(i) Differentiate, $y = \cos^2 \frac{1}{x}$

Answer: $\frac{2}{x^2} \cos \frac{1}{x} \sin \frac{1}{x}$

(ii) Find the limits, $\lim_{x \to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

Answer: 1

### CHEMISTRY IB/ 12

Naming organic compunds

(i) 4,7- dimethyl dodecane
(ii) Buta-1,3-diene-1-ol
(iii) 5-ethyl-5-methyl hept-1-ene
(iv) 5-ethyl-5-heptylcyclohexa-13-diene

### CHEMISTRY 11

At 20°C , in 10 ml of water 3g of $KNO_3$ and 0.8g of $NaHCO_3$ will only be dissolved. If you 10ml of water into the mixture, the whole amount of (3g) of $KNO_3$ will be dissolved and (17.2-0.8)g of $NaHCO_3$ will not dissolve in it. Separate 16.4g of pure $NaHCO_3$ by filtration.

### Adv FUNCTIONS 12

$x^4 + 9 \le 6x^2$;

$(x^2 - 3)^2 \le 0$; $x = \mp\sqrt{3}$

$\log_a x - (\log_a y^3)$

$= \log_a x - 3(\log_a y) = 11$

## Review Questions14 -12

### Physics 11

(I) A ball is dropped from the roof of a high building. A second ball is dropped 2.0 s later. How far apart are the balls when the second ball has reached a speed of 19.6 m/s.

(II) Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

### Physics 12

(I) A pilot of an rescue plane travelling 180 km/h wants to drop supplies to flood victims 200 m below. Determine how far in advance the supplies should be dropped and how many seconds before the plane is directly overhead?

(II) A 50 kg building material is pulled up vertically by a rope for a distance of 50m. The maximum tension that the rope is 600N. What is the shortest time, starting from rest in which the material can be brought up ?

### CHEMISTRY IB 138

1.(i)Name the structure shown below



ii) Predict whether β- elimination reaction proceeds by an $E_1$ or $E_2$ mechanism.

2. Give reaction conditions for the following reactions




Ans. key 14-11 - next issue
☎ 647 341 3975
Dr. K.A.Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# தமிழ்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மெய்வடிவங்களான ட், ப், ம் என்னும் எழுத்துகளும் அறிமுகம் செய்யப்படுகின்றன. பின்பு அறிமுகம் செய்யப்பட்ட ஆறு எழுத்து களையும் கொண்டு ஆக்கக் கூடிய சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு படித்த 6 எழுத்துகளின் உதவியுடன் 5 சொற்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. அந்த எழுத்துகளை எப்படி ஒலிக்கலாம் என்பதும் மிக நெருக்கமான ஆங்கிலச் சொற்களூடாகக் காட்டப்பட்டுள்ளது. 20 ஆம் பக்கம் படித்த

**சபா அருள்சுப்பிரமணியம்**

எழுத்து களைக் கூட்டி வாசிக்கும் பக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. பக்கம் 21 இல் இருந்து ச, ச், க, க், த, த் எழுத்துகளின் அறிமுகம் காணப்படுகிறது. இவ்வாறு அறிமுகம் செய்த ஆறு எழுத்துகளுடன் ஏற்கெனவே கற்ற ஆறு எழுத்துகளையும் வைத்துப் 12 எழுத்துகளுடன் ஆக்கக்கூடிய சொற்கள் பக்கம் 28, 29 இல் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு 19 சொற்கள் ஆக்கிக் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றை உச்சரித்து வாசித்து எழுதும் பகுதியாகவும் அப்பகுதி அமைந்துள்ளது. பக்கம் 30, 31 இவற்றுக்கான பயிற்சிகளாக அமைந்துள்ளன.

பக்கம் 32 இல் இருந்து 39 வரையுள்ள பக்கங்களில் ர, ர், ந, ந், ய, ய், ள, ள் என்ற எழுத்துகளின் அறிமுகம் தொடருகிறது. 40, 41ஆம் பக்கங்கள் சொல்லாக்கத்திற்கும், எழுதி வாசித்தலுக்கும் உரிய பக்கங்களாக அமைந்துள்ளன. தொடர்ந்துவரும் 42ஆம் பக்கத்திலிருந்து 49ஆம் பக்கம்வரை ன, ன், ண, ண், வ, வ், ல, ல் எழுத்துகளின் அறிமுகம் இடம்பெறுகிறது. 50ஆம் 51ஆம் பக்கங்கள் இதுவரை படித்த எழுத்துகளைக் கொண்டு சொற்களை ஆக்கி, எழுதி, வாசிக்கும் பகுதிகளாக உள்ளன. பக்கம் 52 இல் ற, ற் எழுத்துகள் அறிமுகம் செய்யப் பட்ட பின்பு வாசிப்பும், எழுத்தும் இடம் பெறுகின்றன. இதைத் தொடர்ந்து 78ஆம் பக்கத்திலிருந்து உயிரெழுத்துகளின் அறிமுகம் தொடங்குகிறது. உயிர்மெய் எழுத்துகளைப் போன்றே அவையும் எழுத்தறி முகத்தைத் தொடர்ந்து சொல்லறிந்து எழுதி வாசித்துப் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. பக்கம் 106 இல் இருந்து மெய்யெழுத்துகளுடன் உயிர் எழுத்துகள் சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்து வடிவங்களும் அவற்றோடு ஆக்கப்படும் சொற்களும் அறிமுகம் செய்யப்படுகின்றன. இந்த அறிமுகத்தின்போது உகரம் ஊகாரம் ஏறிய மெய்கள் எவ்வாறு 3 பிரிவுகளாக நின்று தமது வடிவத்தை மாற்றுகின்றன என்றும் பக்கம் 112இல் காட்டப்பட்டுள்ளது. பக்கம் 129இல் இருந்து சொற்றொடர் அறிமுகம் தொடங்குகிறது. இங்கே மாணவர் தாம் இதுவரை படித்த எழுத்துகளால் ஆக்கப்பட்டுள்ள சொற்களால் ஆன சொற்றொடர்களை வாசித்துப் பழக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக 134 ஆம் பக்கத்தில் இருதிணை ஐம்பாலிலும் வினை அடிகளை எப்படி நிகழ்கால வினையாக மாற்றுவது என்று எடுத்துக் காட்டுகளூடாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் நூலில் ஆங்காங்கே படம்பார்த்துப் பேசுதல், கதை கேட்டுத் திருப்பிக் கூறுதல் சொற்களஞ்சியத்தைக் கூட்ட உதவும் பாடல்கள், விடுகதைகள், ஒருமை, பன்மை, எதிர்ப்பால், மரபுச் சொற்கள் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன. உண்மையான ஆர்வத்தோடு தமிழைப் படிக்க, அல்லது படிப்பிக்க முன்வரும் எவருக்கும் இங்கு குறிப்பிட்ட தகவல்கள் உதவும் என்ற எண்ணத்தோடு விடைபெறுகிறேன். இந்நூல் ஒருசில மாணவர்களையேனும் தமிழின் பக்கம் ஈர்த்திருந்தால் நூலாக்கம் பயனுள்ளதாக அமைந்துள்ள தென்று மனநிறைவுகொள்வேன். நன்றி.

விரைவில்..........
விளம்பரம் பத்திரிகையில்
அகணி எழுதும் தொடர்கட்டுரை
"அன்புடைமை"

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
SPECIAL CLASSES FOR
❖ PRE-UNIVERSITY
• MCAT EXAM
✚ IB & AP program
• SUMMER CLASSES "July- August"
❖ REGULAR CLASSES "Throughout the year"
GR 1- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# திரை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிந்துவிடுகிறது. 'ஊரின் ஒரு இடத்தில் கிணற்றை இருவருமே தோண்ட வேண்டும். தண்ணீர் வந்த பின்புதான் ஊரைவிட்டே போக வேண்டும்...' என்கிற வினோதமான தண்டனை புதிய ஊர்த் தலைவரான கதா நாயகியின் அப்பாவால் இவர்களுக்கு வழங்கப்படுகிறது. காளி தப்பிக்க முயற்சிக்க, விஷால், நந்திதா நினைவில் அதற்கு மறுக்கிறார்.

இதற்கு இணையான கோட்டில் இன்னொரு கதையும் நகர்ந்து வருகிறது. முண்டாசுப்பட்டி பக்கத்து ஊர் ஜமீன்தாரர் ஆனந்த்ராஜ். இவர் பழைய காலத்து சிலைகளையும் புராதனப் பொருட்களையும் கடத்தி விற்பனை செய்து வருகிறார். இவரிடம் முன்பொரு காலத்தில் முண்டாசுப்பட்டி மக்களிடம் கல்லடி வாங்கி ஓடிய பிரிட்டிஷ்காரரின் மகன் வருகிறான். தன்னுடைய அப்பா முண்டாசுப்பட்டியில் இருந்து வரும்போது அங்கேயுள்ள கோவில் சாமி சிலை கல்லின் ஒரு பகுதியை கொண்டு வந்தார் என்றும் அதனை இப்போது சோதனை செய்து பார்த்ததில் அதில் பல அரிய காணக் கிடைக்காத தனிமங்கள் இருப்பது தெரிகிறது என்றும் அந்த விண் கல்லைக் கொடுத்தால் 80,000 பவுண்டுகள் கொடுப்பதாகவும் சொல்கிறார். ஆனந்தராஜ் முண்டாசுப்பட்டி சாமி சிலையை திருடும் முயற்சியில் இறங்குகிறார். நந்திதா மீதான காதலில் விஷால் வெற்றிபெற்றாரா, காளியும் விஷாலும் முண்டாசுப்பட்டியில் இருந்து தப்பித்தார்களா, முண்டாசுப்பட்டி சிலையை ஆனந்தராஜ் திருடினாரா - இம்மூன்று கேள்விகளுக்குமான விடை இறுதிக் காட்சி. நகைச்சுவைப் படம். அதற்கேற்றால் போல் இயல்பாக நடித்திருக்கிறார் விஷ்ணு விஷால். நந்திதாவுக்கு முன்னால் அடி வாங்குவது போல நடித்துவிட்டு, பிறகு முனீஸ்காந்தை வெளுத்து வாங்குவது நன்றாகயிருக்கிறது.

நந்திதாவுக்கு கிராமத்துப் பெண் வேடம். தன் அழகான கண்களாலேயே நடிக்கிறார். ஆனால், சிரிப்பும் சிலிர்ப்புமாக நகரும் படத்தில் சோகமாகவே இருப்பது ஒட்ட வில்லை. என்ன பிரச்சினையோ? கொஞ்சம் அதிகப்படியான நடிப்பு போல தெரிந்தாலும் மொத்த படத்தையும் தூக்கி நிறுத்துபவர் முனீஸ்காந்துதான். மெதுவாக நகரும் படம் இவருடைய வரவுக்குப் பிறகுதான் சூடு பிடிக்கிறது. தன் படத்துக்கு தானே, சித்தப்பா என நினைத்து, மாலை போட்டு படையல் வைத்துவிட்டு, பிறகு தன் படம்தான் எனத் தெரிந்தபிறகு, 'போட்டோ மட்டும் என் போட்டோ, ஆனால். படையல் ரத்தக்கறி எனக்குக் கிடையாதா?' என பொங்கும்போது வாய்விட்டு சிரிக்க வைத்துவிடுகிறார். கதாநாயகன் உதவியா-ளராக வரும் காளி பொருத்தமான தேர்வு. இவர் அடிக்கும் சின்ன சின்ன 'கமெண்டுகள்' ரசிக்கும்படி இருக்கின்றன. ஜமீனாக வரும் ஆனந்தராஜ், போலி சாமியார் இருவரும் கவர்கிறார்கள். இசை: சீன் ரோல்டன். 'ராசா',



'கனவே' இரு பாடல்களையும் கேட்கலாம். பின்னணியில் பல இடங்களில் பொருத்தமான, அதேநேரம் வித்தியாசமான ஒலித்தடங்களை உபயோகித்திருக்கிறார். 1982ஆம் ஆண்டு தமிழக கிராமத்தை கண் முன்னே கொண்டு வந்ததில் கலை இயக்குநருக்கு சபாஷ் சொல்லவேண்டும். ஒளிப்பதிவு: சங்கர், எடிட்டிங்: லியோ - இருவரும்கூட படத்திற்கு பலம். ஆனால், லியோ இன்னும் கொஞ்சம் கவனமாக தொய்வான இடங்களில் கத்தரி போட்டிருக்கலாம். இயக்கம்: ராம்குமார். 5 நிமிடங்கள் ஓடும் குறும்படத்தின் கதையை முழுநீளப்படமாக இரண்டு மணிநேரம் இருபத்து எட்டு நிமிடங்கள் நீட்டியிருக்கிறார். இப்படிக் குட்டிக் கதையை நீட்டியதாலோ என்னவோ, சில இடங்களில் படம் மெதுவாகவே நகர்கிறது. படத்தின் முதல் அரைமணி நேரம் எழுந்து சென்றுவிடலாமா எனத் தோன்றும் அளவுக்கு இழுக்கப் பட்டிருக்கிறது. வில்லன் விண்வெளிக் கல்லைத் தேடுவதும், கதாநாயகன் - கதாந-ாயகி முதல் சந்திப்பும் பெரிய இழுவை. ஆனால், இப்படி சில குறைகளையும் மீறி படம் சுவாரஸ்யமாக இருக்கிறது. வெறும் வசனங்களால் மட்டுமின்றி பாத்திரங்களின் செயல்களாலும் பார்வையாளர்களை சிரிக்க வைப்பதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். முண்டாசுப்பட்டி மக்களுக்கு எப்படி அப்படியொரு மூடநம்பிக்கை வந்தது என்பதற்கான முன்கதை கற்பனை அருமை, வரலாற்று ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளும்படி இருக்கிறது.

ஒருமுறை பார்க்கலாம்!

# நெற்றிக் கண்ணனே!

ஆண்டவனே ஒரு முறை நான் பார்க்க வேண்டுமே
பட்டதெல்லாம் போதும் என்று கேட்கவேண்டுமே
பாத்திரத்தை ஏந்துவது எங்கள் குற்றமா
படைத்தவன் கணக்கினிலே உள்ள குற்றமோ
நெற்றிக் கண்ணனே நாம் உனது வம்சமா
எம் நெற்றியிலே எழுதியதும் உனது வேலையா

பிட்சை என்பது உனக்கு இஷ்டமானதா
எத்தனை முறை அதை நாம் உச்சரிப்பது
உச்சாடனம் செய்யவது மந்திரமா
நம் இன்னல்கள் உந்தனுக்கு இன்பமானதா
விளையாட துடிக்கும் எம் நெஞ்சுகள் மைதானமா

நெஞ்சு அஞ்சி தினம் தினம் செத்து மடியுதே
பரிதவிக்கும் எங்களுக்கோ ஈர நெஞ்சமே
படியளக்கும் பரமனுக்கோர வஞ்சமே
ஒழித்து வைத்த எறும்பினிற்கு உணவு தந்தாயே
பட்டினியில் வாடும் எம்மை அலைய விட்டாயே

விருந்தாளி போல நோய்கள் வந்து போகுதே
வலிமை இழந்த உடலும் வளைந்து போகுதே
பசி இன்றி வாழ ஒரு வரம் வேண்டுமே
விதியின்றி வாழ ஒரு வழி இல்லையோ

துன்பம் இன்னும் தொடரும் என்று எழுதிவிட்டாயோ
நம் பாவங்களை ஆண்டவன் நீ பொறுப்பதில்லையோ
பழி வாங்க நீ ஒன்றும் மனிதன் இல்லையே
மனித நேயம் மனிதருக்கு இருப்பதில்லையே

நாட்டில் உள்ள துன்பங்களை நீக்கிவிடு
உன் விளையாட்டை கொஞ்ச நேரம் நிறுத்தி விடு
பாவி எம்மை படுத்தாமல் வாழவிடு
எப்போதும் நல் வழியில் போகவிடு

(நதி வழி தானே ஓடமும் போகும்)
(விதி வழி தானே நாமும் போவோம்) - *இனியா*

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com

# AMMAN JOYTHIDA NILAYAM
# அம்மன் ஜோதிட நிலயம்

FAMOUS INDIAN ASTROLOGER

## Pandit Radha Krishnan

**647-308-5045 / 647-761-5544**

585 Middlefield Rd, Unit# 7, Scarborough, ON M1V 4Y5
Finch & Middlefield Beside Datta Foods







ஜோதிடம் இறைவனால் பரம்பரை பரம்பரையாக எமது குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அருங்கொடையாகும்.
இவர் கைரேகை, சாதகம், மற்றும் வழிகளில் துல்லியமாக உங்கள் வாழ்க்கையில் நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். பேய் பிசாசுகள் விரட்டி உங்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

## துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்:

- கைரேகை
- நாமநட்சத்திரம்
- கல்வி
- உத்தியோகம்
- தொழில்
- வியாபாரம் விருத்தியடைதல்
- இலட்சுமி வசீகரம்
- திருமணயோகம்
- குழந்தைப்பாக்கியம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- வாஸ்துசாத்திரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டு பயணங்கள்
- எதிரிகள்
- கண்திருஸ்டி
- கஸ்டநஸ்டங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- வாகனப் பொருத்தம்
- பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சினைகள்

ஒன்றுகூடல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். ஏதேனும் கெட்டது இருந்தால் பரிகாரம் செய்வார். உங்கள் கதவைத்தட்டும் அதிஸ்டத்தை தவறவிட்டு விடாதீர்கள். இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்பனை பற்றி நன்கு அறிந்து வாழ்க்கையை நல்லதாக்கிகொள்ள பண்டித் அவர்களை சந்தியுங்கள்.

# தமிழ் மக்களுக்கு கொடுத்த பரிசு!

## அஞ்சலி - ராம. நாராயணன்

சமகால தமிழ் திரைப்பட இயக்குநர்களில் அதிக நம்பிக்கைக்குரிய வெற்றிப்பட இயக்குநர் என அறியப்பட்டவர் ராம. நாராயணன். 36 ஆண்டுகளில் 125 திரைப் படங்கள் என உலக சாதனை நிகழ்த்தியவர். சென்ற மாதம் சிங்கப்பூரில் 66 வயதில் காலமான ராம. நாராயணனின் திரையுலக பயணத்தைத் திரும்பிப் பார்க்கும்போதே, இது எவ்வளவு பெரிய இழப்பு என்பதை நம்மால் உணர முடியும்! செட்டிநாட்டில் 3 ஏப்ரல் 1949 அன்று பிறந்தவர் ராம. நாராயணன். இயக்குனர், தயாரிப்பாளர், தயாரிப்பாளர் சங்கத் தலைவர் என பல திரையுலக அவதாரங்களை எடுத்தவர். தமிழ் தவிர தெலுங்கு, கன்னடம், இந்தி மொழிகளிலும் படங்களை இயக்கியுள்ளார். ஒரு மலேய மொழிப் படமும் இதில் அடங்கும்.

ராம. நாராயணனின் ஆரம்ப காலப் படங்களில் தொழிலாளர் வர்க்கத்தின் குரல் ஓங்கி ஒலித்தது. 'சிவப்பு மல்லி', 'எங்கள் நாடு' போன்ற பல படங்கள் உடனடியாக ஞாபகத்துக்கு வருபவை. நடுத்தர வர்க்கத்தின், ஏழைகளின் பாட்டை முன்னுறுத்திய படங்கள் 'சுமை', 'சோறு' போன்றவை. 'சுமை' படத்தில் பொறுப்பற்ற தகப்பன் ஏழெட்டு பிள்ளைகளை பெற்றுப் போட்டதால் குடும்பப் பாரத்தை சுமக்கும் மூத்த மகனாக சந்திரசேகர் நடித்திருப்பார். இப்படம் சந்திரசேகருக்கும் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இராம. நாராயணனின் பிற்காலப் படங்களைப் பார்த்து ரசித்தவர்கள், அதற்காக இன்று அவரைக் கொண்டாடுபவர்கள் இப்படங்களைப் பார்த்தால், இவற்றை எடுத்தது ராம.நாராயணன்தான் என்பதை ஏற்றுக்கொள்ளவே தயங்குவார்கள். ராம. நாராயணனின் இன்னொரு பரிமாணம் இது.

'வெற்றி' தான் முக்கியம் என்னும் திரையுலக வழக்கப்படி, இப்படங்கள் வழியாக பொருளாதார ரீதியாகப் பெரிதாகச் சாதிக்க முடியாத சூழலில் ராம. நாராயணன் நகைச் சுவைப் பக்கம் சாய்ந்தார். 'மன்மத ராஜாக்கள்', 'மணந்தால் மகாதேவன்', 'சகாதேவன் மகாதேவன்' போன்றவற்றை எடுத்தார். இதில் 'மணந்தால் மகாதேவன்', 'சகாதேவன் மகாதேவன்' ஆகிய படங்கள் இவருக்கு மிகப்பெரும் வெற்றியைக் கொடுத்தன.

நகைச்சுவைப் படங்களைத் தொடர்ச்சியாகக் கொடுத்துக் கொண்டிருந்த இராம. நாராயணன் ஒருகட்டத்தில் அதில் அலுப்பு ஏற்பட்டோ என்னவோ மிருகங்கள், சிறுவர்கள் கூட்டணியில் வரிசையாக படங்கள் எடுத்தார். இதே காலகட்டத்தில் சாமிப் படங்களும் நிறைய எடுத்தார். இவற்றில் பெரும்பாலான படங்கள் வெற்றி பெற, வெற்றி சூத்திரத்தைக் கண்டுபிடித்து விட்டவர் போல் தொடர்ச்சியாக அதேபோன்ற நிறைய படங்களை எடுத்தார். 'ஆடி வெள்ளி', 'துர்கா' போன்றவை மிகப்பெரும் வெற்றிப் படங்களாக அமைந்தன. 'ஆடி வெள்ளி' படம் பார்த்த பல பெண்கள் சாமி வந்து ஆடிய கதையும் இவரின் அம்மன் படங்களை தொடர்ந்து வெளியிடும் பல திரையரங்கங்களில் அம்மன் சிலை வைக்கப்பட்டதும் மிகப் பிரபலம். அதிகம் செலவு இல்லாத, வெற்றி உறுதியான படங்களாகவும் இவை இருந்ததால் 'தைப்பூசம்', 'செந்தூரதேவி', 'ஈஸ்வரி', 'ராஜ காளியம்மன்' என்று இதே பாணியில் தொடர்ச்சியாகக் கொடுத்துக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட எல்லாமே ஒரே கதை. உண்மையான பக்தைக்கு ஒரு அநீதி இழைக்கப்படும்போது கடவுள் அவதரிப்பார் என்பதே இவ்வனைத்து படங்களின் கதைக் கரு. ஆனால், இந்த ஒரே கருவை வெவ்வேறுவிதமாக பரிமாறி ரசிகர்களை ஈர்த்த விதத்தில்தான் ராம நாராயணன் நிற்கிறார்.

125 படங்கள் இயக்கியிருந்தாலும் பிராணிகளை வைத்து இயக்கிய படங்களுக்காகத் தான் ராம. நாராயணன் இன்று அதிகமும் நினைவுகூரப்படுகிறார். குறைந்த முதலீட்டில் நிறைய லாபத்தை ஈட்டும் சாதுர்யம் மிக்க இயக்குநர் என்ற நற்பெயரை திரைத்துறைக்



குள் இப்படங்கள்தான் இவருக்குப் பெற்றுத் தந்தன. ஆரம்ப காலத்தில் இயக்குனர் எம். ஏ. காஜாவோடு இணைந்து 'ஶ்ரீதேவி பிரியா பிலிம்ஸ்' என்ற தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கி படங்களைத் தயாரித்திருக்கிறார், ராம. நாராயணன். கங்கை அமரன் இசையமைப்பாளராக அறிமுகமான 'ஒரு விடுகதை ஒரு தொடர்கதை', 'ஶ்ரீதேவி பிரியா பிலிம்ஸ்' மூலம் இவர்கள் தயாரித்ததுதான். பின்னர் 'ஶ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ்' நிறுவனத்தை உருவாக்கினார். இதன் வழியாக பல நேரடிப் படங்களை இயக்கியுள்ளார். பல மொழி மாற்றுப் படங்களைத் தமிழுக்கு கொண்டும் வந்திருக்கிறார். பிரபல ஆங்கில, தெலுங்குப் படங்கள் பல தேனாண்டாள் பிலிம்ஸ் வழியாக தமிழுக்கு வந்திருக்கின்றன.

இராம. நாராயணன் படங்களுக்கு அதிகம் இசையமைத்தவர்கள் சங்கர் கணேஷ்

**தொடர்ச்சி 38ஆம் பக்கம்**




நகைச்சுவைத் தொடர் 290

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



ஆண்டு ஒவ்வொன்றும் போகப்போக உலகில் எத்தனை மாற்றங்கள். மாகாண அரசு மாறிவிட்டது. எரிபொருள் விலை, மரக்கறி, பழவகை அது இது என விலையேறிவிட்டன. (எங்கள் இடியப்பம், கொத்து றொட்டி விலைகளில் அதிக மாற்றமில்லை)



பல நாடுகள் பிரிந்துள்ளன. பல பிரிய வழிவகுத்துக் கொண்டிருக்கின்றன. உலகில் என்ன மாற்றம் வந்தாலும் மனிதன் அதிகம் மாறியதாகத் தெரியவில்லை.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே….' ஒவ்வொரு தமிழ் மாதம் பிறப்பது 14 அல்லது 15ம் திகதிகளில் தைப்பொங்கல் ஜனவரி 14. சித்திரை புத்தாண்டு ஏப்பிரல் 14. ஆடிப்பிறப்பு யூலை 16.



ஆடிப்பிறப்பு இந்துக்களின் சமய விடுமுறைகளில் ஒன்றாகும் என உலகர் படித்த காலத்தில் படித்திருந்தார். பலருக்கு நவாலியூர் சோமசுந்தரப் புலவரை ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ, அவரின் 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' பாட்டை மறக்க மாட்டார்கள்.



பாடசாலை முடிந்ததும் வீதிகளில் நண்பர்களுடன் 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என கூக்குரலிட்டு வந்த காலம் மலையேறி விட்டது. எல்லா மாணவர்கள் கையிலும் செல்போனும் உந்த கமெறாவும்தான். யாருடனும் யாரும் பேசுவதில்லை. இது தொழில் நுட்பம் வளர்ந்த காலம். யாரோடும் பேசக்கூடாது.



ஐ பொட் அகிலாண்டேஸ்வரி தனது லப் ரொப்பில் செய்திகளை ஆட்டிலறி அன்னம்மாவுக்கும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்கும் காட்டிக்கொண்டிருந்தா. அதில் அமெரிக்க ஜனாதிபதிகளை மரத்தில் கட்டிவைத்து அடிக்கவேண்டும் என்று இலங்கை உயர் கல்வி அமைச்சர் திஸநாயக்கா கூறியிருக்கிறார். ஜோர்ஜ் புஸ், ஜோர்ஜ் டபிள்யு புஸ் போன்றோர் செய்த குற்றங்களுக்காக அவர்களைத் தாக்கி தொங்கவிட்டு கொன்று தரையில் இழுத்துச்செல்ல வேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்களை இந்தநாட்டுக்குள் வரவிடக்கூடாது என்றும் எச்சரித்திருக்கிறார் என்பதை வாசித்துவிட்டு செக்கண்டபுளோர் செல்லம்மா சிரிக்க உலகர் சொன்னார் இருந்த பனை தென்னை பழமரங்களை ஈழப்போரின்போது செல்லடி ஆட்டிலறி தாக்குதலில் அழித்துப்போட்டினம். இனி இந்தச்சாட்டிலை மரங்களை நட்டும் என்றுசொல்லிவிட்டு ரி.வி.யைப் பார்த்துக்கொண்டிருந்தார்.



கொலை குற்றம், கொலை செய்யத்தூண்டுதல் குற்றம். தற்கொலை குற்றம். தற்கொலை செய்யத்தூண்டுதல் குற்றம். தற்கொலை முயற்சி செய்பவவை தடுக்காமல் செத்துத்தொலை என்பது போல சொல்வது குற்றமில்லையா?



ஈராக் அதிபர் சதாம் குசைன் தனக்கு தூக்குதண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிபதி ரவூப் ரசீத் அப்துல் ரஹ்மானை நோக்கி, சொன்ன வார்த்தைகள் 'நீ அமெரிக்காவின் பேச்சைக் கேட்டு எனக்கு தூக்கு தண்டனை விதித்துள்ளாய். ஆனால் உன்னுடைய மரணம் நிகழப்போவது என்னுடைய மக்கள் கையால் தான் என்பதை மறந்துவிடாதே' எனக் கூறினார். அது இன்று உண்மையாகிவிட்டது. ஈராக்கில் இன்று கிளர்ச்சி செய்துகொண்டிருக்கும் ஐஎஸ்ஐஎஸ் போராளிக் குழுவினர் அவரைப்பிடித்து தூக்கிலிட்டனர்.

## யூலை 1….15



1. கனடா டே - 147 வது. (1867 ஆண்டு)

1. 'வெள்ளி' பத்திரிகை வரதர் பிறந்தநாள் (1924…2006)



3. 1842ல் யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

4. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவையின் முதலாவது தமிழ் மகாநாடு பென்சில்வேனியாவில் நடைபெற்றது.

4. சுவாமி விவேகானந்தர் நினைவுதினம். (1863-1902)



4. ஐக்கிய அமெரிக்க விடுதலை நாள். (1776)

5. கரும்புலிகள் தினம். 1987 யூலை 5 (நெல்லியடியில் கப்ரன் மில்லர் இராணுவமுகாம்மீது முதலாவது தற்கொலைத் தாக்குதல்)

5. சல்வேசன் ஆமி 1865 இல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

6. தவில் மேதை இணுவில் என். ஆர்.சின்னராசா நினைவுதினம். (1934-1991)

8. அரிச்சந்திரா புகழ் நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுதினம். (1924-1989)



10. ஈழத்து எழுத்தாளர் நாவேந்தன் நினைவுதினம் (1932 - 2000)

17. உலகத்தின் 7 வது அதிசயமாக 1977ல் தாஜ்மகால் அறிவிக்கப்பட்டது.

15. ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் என். கே. பத்மநாதன் நினைவுதினம். (1932-2003)

15. ஈழத்து பிரபல எழுத்தாளர் நெல்லை க.பேரன் நினைவுதினம் (1946-1991)

16. ஆடிப்பிறப்பு.

உங்களைச் சுற்றியுள்ள பல கோவில்களில் கொடியேற்றம் திருவிழா தேர் தீர்த்தம் பூங்காவனம்… ஆலய தரிசனம் செய்யலாமே.

# தமிழ்…

37ஆம் பக்கத்தொடர்ச்சி

இரட்டையர்கள்தான். சங்கரும் கணேஷம் பிரிந்து தனித்தனியாக இசையமைத்த வேளையில் இருவருக்கும் மாறி மாறித்



தனது படங்களில் வாய்ப்புக் கொடுத்தார். விஜய்காந்த், எஸ்.வி. சேகர், மோகன், நிழல்கள் ரவி போன்ற நடிகர்கள் பலருக்கு இவரின் படங்கள்தான் மறுபிரவேசமாகவும் வெற்றியாகவும் அமைந்தன. அர்ஜுனை தமிழில் அறிமுகம் செய்தவர் இவர்தான். ராமராஜன் இவரின் உதவியாளராக இருந்திருக்கிறார். அம்மன் படங்கள் எடுத்த ராம. நாராயணன் திராவிட முன்னேற்ற கழகத்தின் மீதும் கழக இலட்சியங்களின் மீதும் விசுவாசமும் பிடிப்பும் கொண்டிருந்தது பெரிய முரண்பாடு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் காரைக்குடி சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார். கடைசி கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் பதவி இவருக்கு வழங்கப்பட்டது. இவருடைய படங்களில் எஸ்.எஸ்.சந்திரன் நடித்த பாத்திரங்களின் வாயிலாக அந்தக் கால அரசியல் எள்ளல் மிகுந்திருப்பதைக் காணலாம். சிறந்த உதாரணம்: 'சகாதேவன் மகாதேவன்.' இதுபோல் இன்னொரு ஆச்சரியமான முரண்பாடு 'சிகப்பு மல்லி' படம் எடுத்த ராம. நாரயணந்தான் பிற்காலங்களில் சாமி படங்களாக எடுத்தார் என்பதும். இன்றும் மே தினங்களில் 'எரிமலை எப்படிப் பொறுக்கும்?' பாடல்களை கேட்டிருக்கலாம். நாடி நரம்பு களை சூடேரச் செய்யும் இப்பாடல் தமிழக உழைப்பாளி மக்களுக்கு ராம. நாராயணன் கொடுத்த பரிசு!

06ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகக்கிண்ண கால்பந்து வரலாற்றில் ஒழுங்கீன செயலுக்காக, அதிக ஆட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்ட சம்பவம் இதுதான்.

இதற்கு முன்பு 1994ம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் ஸ்பெயின் வீரர் லூயிஸ் என்ரிகியூவின் மூக்கை உடைத்ததற்காக இத்தாலியின் மவுரோ டாசோட்டிக்கு 8 ஆட்டத்தில் விளையாட தடை செய்யப்பட்டதே இந்த வகையில் அதிகபட்ச தண்டனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸியை ஊதித்தள்ளிய ரொனால்டோ



உலகக்கிண்ண விளம்பர ஒப்பந்தத்தில் அதிக வருவாய் பெறுவதில் போர்ச்சுக்கல் அணியின் ரொனால்டோ ஆர்ஜென்டினா அணியின் மெஸ்ஸியை ஓரங்கட்டினார். நைக் நிறுவனத்துடன் ஒப்பந்தமாகியுள்ள ரொனால்டோ ஆண்டுக்கு 14.1 மில்லியன் பவுண்ட் ஊதியமாக பெறுகிறார். ஆனால் அதேநேரம் அடிடேஸ் நிறுவனமுடன் ஒப்பந்தமாகியுள்ள மெஸ்ஸி ஆண்டுக்கு 13.6 மில்லியன் புவுண்ட் ஊதியமாக பெறுகிறார்

இதன் மூலம் உலகக்கிண்ண விளம்பர ஒப்பந்த வருமானத்தில் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் மெஸ்ஸியும், மூன்றாவது இடத்தில் நெய்மரும் (9.5 மில்லியன் பவுண்ட்) இடம் பெற்றுள்ளனர். தோமஸ் முல்லர் (3 மில்லியன் பவுண்ட்), ஓசில் (3 மில்லியன் பவுண்ட்), ரூனி (3 மில்லியன் பவுண்ட்) அடுத்தடுத்த இடங்களை பெற்றுள்ளனர்.

# GAS STATIONS/BUSINESSES FOR SALE



**Colombia Way/ Hwy 50**
Sale Of Business
Without Property
Gas Stations
$269,000
Golden Opportunity To Own Operate Family Gas Bar In Gta.



**Peterborough**
Sale Of Business
With Property
Convenience/Variety
$395,000
Excellent Location, Rare Opportunity To Own & Operate A Well Established (35 Yrs) Branded C Store, "Daisy Mart".

**GAS STATION**

**Minden Hills**
Sale Of Business
With Property
Gas Stations
$495,000
Well Established Enroute Stop Over On Busy Hwy 503 Connects Gas Station

**Beauty Salon With Property**



Well Established Beauty, Spa & Salon In A Busy High Traffic Indoor Mall
$388,00
Plus Stock



**Waterloo**
**Beverly/Wellingto**
Sale Of Business
With Property
Gas Stations
$1,250,000
Plus Stock
Busy Corner Location Next To City Hall Surrounded By Appts& Houses, Lots Of Walk In Loyal Customer



**Kingston**
**Division St /Benson St**
Sale Of Business
With Property
Gas Stations
$1,798,000
Plus Stock
Well Established And Maintained Busy Shell Gas Station In Fast Growing Kingston City



**Brantford**
**King George Rd/Highway**
Sale Of Business
With Property
Gas Stations
$1,999,999
Plus Stock
Excellent Oppertunity To Own A # 1 Branded Esso Ctr Gas Station In Urban Town



## Nel Ketha
Sales Representative
**416.677.4707**

Smart Real Estate Solutions

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member

---

# வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT

SKT PARALEGAL SERVICE

CRIMINAL MATTERS
SUMMARY

**416.803.5296**

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்



SK THEESAN

# TRAFFIC TICKETS

LICENSED PARALEGAL sktheesan@gmail.com

**MOTOR VEHICLE ACCIDENT**
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

**TRAFFIC TICKETS**
DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

**CRIMINAL CONVICTION**
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

100% GUARANTEED
Malayal Bhagawathi Joythidam
(From Kerala)

- கைரேகை
- தொழில் வியாபாரம்
- குடும்ப பிரச்சினைகள்
- கணவன் மனைவி ஒற்றுமை
- சர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- திருமண யோகம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கஸ்ட நஷ்டங்கள்
- கல்வி, உத்தியோகம்
- நீதிமன்ற வழக்குகள்
- குழந்தை பாக்கியம்
- சர்ப்ப தோஷம்

**Pandit Tulsidhar Swamiji: 647.856.0559**
GTA Square Mall (2nd Floor), 5215 Finch Ave. E., # 257 Scarboough ON M1S 0C2

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

**Vany Jeganmohan**
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"

**SchurenSriskandarajah** B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393


Low Mortgage Rates
**TD Canada Trust**
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692
1-800-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

## RealEstate / Mortgage / Commercial Investments


BOVAIRD & SANDALEWOOD (BRAMPTON)
Bedroom : 4 + 1
Washroom: 3
Price : $449, 900


BALDWIN & WINCHESTER (WHITBY)
Bedroom : 3
Washroom: 4
Price : $398,000


HOOVER PARK & 9TH LINE (STOUFFVILLE)
Bedroom : 4
Washroom: 3
Price : $569,900


FREELAND & LIBERTY ST (COURTICE)
Bedroom : 4
Washroom: 3
Price : $339,900


WESTNEY & ROSSLAND (AJAX)
Bedroom : 4
Washroom: 3
Price : $339,900


MARKHAM & 16 TH AVE (FOR LEASE)
Bedroom : 4
Washroom: 4
Lease : $1850


MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage
**A. Anton Jeeva** B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated

**Raj Paramasamy**
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result

CENTUM Optima Mortgages Inc.
**Need a Mortgage?**
- Residential and Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity loan


**Gini Annarasa**
Mortgage Broker Lic #M08005550
Cell: 416.830.3241
Email: gini.annarasa@gmail.com

RBC Insurance
Save an Average of $695 per Year.
Combine Car & Home Plus Life Insurance.

RBC Insurance:
- Home
- Auto
- Life
- Health
- Travel
- RRSP
- TFSA

Mailvaganam Mahindan, M.Sc.
Insurance Advisor
647.215.5967